
விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, ஆவணி 18 உ புதன் (3-9-69) ஐ. ஆகிர் 20 புத்தகம் 23 இதழ் 43




# ஒற்றையாட்சியை ஆதரிக்கும் சக்திகளுக்கு சிங்கள முதலாளிகள் உதவி!

**தென்னிலங்கையில் பணம் திரட்டப்படுகிறது!**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடுதத தேர்தல் ஒற்றையாட்சி அரசியற் திட்டத்தை ஆதரித்து—சமஷ்டி அரசமைப்பைக் கோரும் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் போட்டியிடும் சக்திகளினைகையைப் பலப்படுத்த பல சிங்கள ஸ்தாபனங்களும் சிங்கள முதலாளிகளும் முன் வந்துள்ளனரென்று தெரிகிறது. இவர்களுக்கு உதவுவதற்காக தேர்தல் செலவுக்கென பெருந் தொகையான பணததைத சிங்கள முதலாளிகளிடமிருந்து திரட்டிக் கொடுக்கவும் ஒரு குறிப்பிட்ட சிங்களஸ்தாபனம் முன்வந்திருக்கிறது.

இதுசம்பந்தமாக அந்த ஸ்தாபனம் ஒரு இரகசிய துண்டுப் பிரசாரத்தை சிங்கள மக்களிடையே விநியோகித்து வருகிறது. அதில் கூறப் பட்டிருப்பதாவது:-

இந்த நாட்டில் ஒற்றையாட்சி அரசியலமைப்பு இருந்தால்தான் சிங்கள இனம் தனது ஆதிபத்தியத்துடன் தலைநிமிர்ந்து வாழ முடியும். வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலும் சென்று குடியேற முடியும். ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாற்றப்பட்டு சமஷ்டி ஏற்பட்டால் தமிழர்களுக்கும எமது சிங்கள துவீபத்தில் பங்கு கொடுக்க வேண்டியேற்படும்.

தமிழர்களிடம் எழுந்துள்ள சமஷ்டிக் கூக்குரலை மட்டந்தட்ட அடுத்ததேர்தல் நல்ல வாய்ப்பாக இருக்கிறது. ஒரு தமிழ்க்கட்சி நல்லவேளையாக ஒற்றையாட்சியையே ஆதரிக்கிறது. அந்தக்கட்சிக்கு தேர்தலில்வெல்வதற்கு சிங்கள மக்கள் உதவி செய்வதன்மூலம் சமஷ்டிக் குரலை அடக்கிவிட வாய்ப்பு ஏற்படும்.''

—இந்தச்சாரப்பட அத்துண்டுப்பிரசுரம் தெரிவிக்கிறது.

---

# தமிழ் காங்கிரசின் பண்புகெட்ட செயல்

## வன்னியர் சிலை நிறுவுவதில் முட்டுக்கட்டை போட முயற்சி

**தமிழினத்துக்காக கடைசி மூச்சுவரை போராடி அப்போராட்டத்தில் தன் உயிரையே அர்ப்பணித்த விடுதலை வீரர்—கோப்பாய்க் கோமான் அமரர் வன்னிய சிங்கம் அவர்களது இறுதிச் சடங்குகளில் மரியாதைக்குகூட கலந்து கொள்ளாது தமிழ் பண்பாட்டையே குழி தோண்டிப் புதைத்த தமிழ் காங்கிரஸ் கட்சியினர் இப்போது அவருக்கு சிலை நிறுவும் முயற்சியிலும் கல்லுக் குத்த'முன் வந்திருக்கின்றனர்.**

அமரர் வன்னிய சிங்கத்துக்கு இம்மாதம் 17ந் திகதி யாழ்ப்பாணத்தில் சிலை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவது தெரிந்ததே. இதை முறியடிப்பதற்கு தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் பலசதி முயற்சிகளில் இப்போது மிகவும் கீழ்த்தரமாக இறங்கியிருக்கின்றனர்.

வன்னியர் சிலை நிறுவப்படுவதை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் உதவிக் காரியதரிசி திரு. சங்கரப்பிள்ளை யாழ்: மேயருக்கும் மற்றும் மாநகர சபை அங்கத்தவர்களுக்கும் பின் வரும் கடிதத்தை அனுப்பியுள்ளாராம்.

''பிரச்சினைக்குரிய இந்த விடயத்தில் தலையிட வேண்டாம். அரசியல் சமயத்துறைகளில் அரும் பெரும் சேவை புரிந்த பல பெரியார்கள் இருந்தும் அவர்களில் யாருக்கும் நகரில் சிலை நிறுவப்படவில்லை. பயனுள்ள காரியம் எதையும் வன்னிய சிங்கம் சாதிக்கவில்லை. சாதனை புரிந்தவர்களுக்கே சிலை நிறுவுவது வழக்கம். ஏனையோருக்கு நிறுவுவது சிலையல்ல; வெறும் கல் ஆகவே இம் முயற்சியைக் கைவிடவும்''

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[நாட்டோரே! நல்லிதயம் படைத்த பெரியோர்களே! தமிழ் காங்கிரசின்

(9ம் பக்கம் பார்க்க)

---

சீமெந்து தொழிற்சாலையில்

# 240 தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர்!

## செல்வா முயற்சிவெற்றி தொழிலாளர் குதூகலம்!

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் தற்காலிக ஊழியாகளாக கடமை யாற்றிவந்த 240 தொழிலாளர்கள்தமிழரசுத் தநதை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பா. உ. எடுத்த தொடர்பான நடவடிககைகளின் பயனாக இம்மாதம் முதலாந் திகதி முதல் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். இதையிட்டு மேற்படி தொழிலாளர்கள். மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளதுடன் திரு. சா. ஜே. வேக்கு விரைவில் வரவேற்பளிக்கவும் முடிவு செய்துள்ளனர்.

இப்பொழுது நிரந்தரமாக்கப்பட்டுள்ள இந்த 240 தொழிலாளர்களும் 1956ம் ஆண்டு முதல் தற்காலிக ஊழியர்களாக கடமை புரிந்து வந்தவர்கள். இவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகமும் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கமும் பல மாதங்களாக தொடர்ந்து சீமெந்



(9ம் பக்கம் பார்க்க)

---

# நவரத்தினம் கட்சி கூட்டம் பிசுபிசுத்தது!

சென்றவாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊர்காவற்றுறை பா. உ. திரு. நவரத்தினத்தின் புதிய கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டம் பிசுபிசுத்துவிட்டதாக தெரிகிறது. இக்கூட்டததில் ஆக 87 பேர் மட்டுமே (பார்வையாளர்கள் உட்பட) கலந்து கொண்டதாக சி. ஐ. டி. அறிக்கையொன்று தெரிவிக்கிறது. அதிலும் பெரும்பாலோர் தீவுப்பகுதியிலும் வல்வெட்டித்துறையிலுமி

(9ம் பக்கம் பார்க்க)

---

# பட்டுநகர் முடிசூடா மன்னரை தினபதி ஆசிரியர் வீழ்த்த முடியுமா?

கிழக்கு மாகாணத்தில் அடுத்த தேர்தலின் போது தமிழரசுக் கட்சியை வேரோடு கெல்லி எறிவதற்கு தம்மால முடிந்த அளவுக்கு உதவி செய்வதாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த யூ. என். பி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் 'தினபதி' ஆசிரியர் வாக்குறுதியளித்திருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

குறிப்பாக மட்டக்களப்பில் திரு. இராசதுரையையும், பட்டிருப்பில் திரு. சி. மூ. இராசமாணிக்கத்தையும் தோற்கடிப்பதற்குதமது முழுச் சக்தியையும் செலவிடப்போவதாக 'தினபதி' ஆசிரியர் உறுதி தெரிவித்திருக்கிறாராம்.

தினபதி ஆசிரியர் மேற்கண்ட வாக்குறுதியை குறி

(9ம் பக்கம் பார்கக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னியர் சிலை நிதிக்கு வாரி வழங்குவீர்!**

நமது தொடர்கதை

# கர்ப்பக்கிருகம்

## அத்தியாயம் (1)

கடலில் பிறந்து கடலில் மடியும் கடலலைகளைப் போன்று மனதில் பிறந்து செயலில் மடிந்துவிடும் மன அலைகளும் அத்துடன் முடிந்துவிடுவதில்லை. மீண்டும் மீண்டும் பிறந்து மடிந்து கொண்டேதானிருக்கின்றன.

கள்ளங்கபடமறியாத சின்னப்பெண்ணுக விருந்து, பருவப் பெண்ணுன போதும் அவள் உள்ளம் எதற்காகவும், எப்பவும் ஏங்கித் தவித்தது கிடையாது; ஆனல் மூன்று வருடங்களுக்கு முன்னல் நடந்துவிட்ட அந்தப் பயங்கரம் அவள் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திவிட்டது;

இரவு வந்ததும் அவள் உள்ளம் பூரணை நிலவைக் கண்ட கடல்போலக் குமுறும். அந்தக் கொந்தளிப்பு பேரலைகளாகி அவள் உள்ளக் கடலையே உலுப்பி எடுத்துவிடும்; அந்த உணர்வலைகள் எங்காவது அதற்கு மாறுன எதிர்ப்புச் சக்தியுடன் மோதும்போதுதான் மடிகின்றது.

கடலில் பிறக்கும் அலைகள் ஆரவாரித்து எழுந்துவிட்டு தானே அடங்கிக் கொள்வதில்லையே. அவை கூட கரையை நோக்கி நிலத்தின் அணைப்பை நாடித் தானே ஓடிவருகின்றன. ஆனல் இடையில் எங்காவது கற்பாறைகள் நின்ருலும் முட்டி மோதிச் சிதறுண்டு அடங்கத்தானே செய்கின்றன. அதேபோன்று அவள் உணர்வுகள் மூன்று வருடகாலத்தில் எத்தனையோ பாறைகளில் மோதுண்டு சிதறிவிட்டன. ஆனல் அதற்கு அமைதியோ, நிறைவோ, முடிவோ...?

'கீதா, என்னடி செய்கிருய்?' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் கீதாஞ்சலியின் அக்காள் சுவர்ணு.

'சும்மா சிந்தனை வசமாகி விட்டிருந்தேன் அக்கா.' என்ருள் கீதா.

உனக்கு என்னடியம்மா குடும்பக் கவலையா? என்று கேலியாகக் கேட்டாள் சுவர்ணு.

'குழந்தை குட்டிகளின் கவலைதான், கவலையா அக்கா? வேறு...'

'ஓ...உனக்கு என்ன கவலை என்று சொல்லட்டுமா?'

'சொல்லேன்... பார்க்கலாம்?'

'வாசிற்றிக்கு என்ர பண்ண முடியவில்லையே என்ற கவலைதான்' என்று கூறிவிட்டு அவளுக்குப் புத்தி கூற முயன்ருள் சுவர்ணு.

'அக்காள்தான் அக்கா' என்று கூறி அவள் கன்னங்களைத் தட்டிவிட்டு உள்ளே சென்ருள் கீதாஞ்சலி.

கீதாஞ்சலி சிறு பெண் என்ற நினைப்பு அக்காள் சுவர்ணுவுக்கு. குடும்பத்தில் ஈடுபட்டு நான்கு வருடங்களில் இரு குழந்தைகளுக்கு தாயாகிவிட்ட சுவர்ணுவுக்கு இன்னும் தன்தங்கை சிறுபிள்ளையாகவேஇருப்பதுபோன்ற நினைப்பு. இருமுறை பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாது போனதால் அது பற்றிய கவலையில் தங்கை சிந்தனைவசமாய் தனியேயிருந்து சதா கவலைப்படுவதாகத்தான் சுவர்ணுவால் நினைக்கமுடிந்தது. அவளும் அப்படித்தானே முன்பு நினைத்தவள். தன்னைப் போன்றே தங்கையும் என எண்ணினுள்.

பொதுவாக ஒவ்வொருவரும் தன்னைப்போல பிறரை எண்ணுவதில்லை. அப்படி எண்ணினுலும் தீய காரியங்களில் நினைப்பார்களேயன்றி திறமையிலோ, நல்ல காரியங்களிலோ தன்னைவிட மற்றவரை உயர்வாக எண்ண முடிவதில்லை. ஆனல் தங்கையைப் பொறுத்தமட்டில அவளை எந்தவிதமாகவும் நினைக்க சுவர்ணுவால் முடியவில்லை.

அதே வேளையில் அக்காவின் வஞ்சனையற்ற, வெள்ளை உள்ளத்தின் பேதமையை எண்ணி தன்னுள்ளே நகைத்துக்கொண்டாள், கீதாஞ்சலி. அவளுடைய உள்ளம் அக்காளுக்காக வேதனையடைந்தது ஒருபுறம். மறுபுறம் அவள் உடலும் உள்ளமும் தன்னிலை மறந்து பந்தபாசங்களுக்கு அப்பால் சென்றுவிடும். அப்போதைக்கு அவளுக்குத் தேவையானது, உடலையும், உள்ளத்தையும் வருத்தும் அக்கினி உணர்வுகளை அணைத்துக் குளிர்விக்கும் மாறுபட்ட ஒரு சக்தியே. உரிமையுடன் அவற்றைப் பெற்றுக்கொள்வதால் அக்கா அது பற்றிய சிந்தனையை மறந்திருப்பதாகவே கீதாவுக்குத் தோன்றிற்று.

மாலை நான்கு மணியிருக்கும் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தால் வந்துவிட்டனர். 'சித்தி சித்தி' இருவரும் கீதாஞ்சலியை அணைத்துக் கொண்டே துள்ளிக் குதித்தனர்.

'அக்கா இவர்களுக்கு ரீ கொண்டுவந்து கொடேன்' என்ருள் கீதாஞ்சலி;

'நீ தான்டி இவன்களுக்கு செல்லம் கொடுக்கிருய். வர வர குழப்படி கூடிப்போச்சு' என்ருள் சுவர்ணு;

இதற்கிடையில் போன் மணி ஒலிக்கவே சுவர்ணு சென்று தொலைபேசியில் அழைத்தது யார் என விசாரித்தாள்.

'ஹலோ...'

'ஓ...நீங்களா? என்னத் தான், வீட்டுக்குவரும் நேரத்தில் போனை தூக்கி வைத்துக்கொண்டே...'

'சுவர்ணு இன்று எனக்கு 'ஓவர் டைம்வேக்' இருக்கு.'

'அப்படியா?

'ஆமா; ஆகவே இரவு ஒரு மணியளவில்தான் வீட்டுக்கு வருவேன். நீங்கள் சாப்பிட்டுவிட்டுப் படுங்கள்'

'இதைச் சொல்லத்தான் இவ்வளவு அவசரப்பட்டீர்களாக்கும். போங்கத்தான்.'

'அசடு. அசடு... அப்புறம் வந்து...ம்...'

'சீ... நீங்கள் பொல்லாத மனிதர். எந்த நேரமும் உங்களுக்கு...'

'ஏ... ஓாஸ்... சேரியோ' என்று கூறிவிட்டு போனை வைத்தான்.

'என்னக்கா யார் போனில் பேசியது ஒரேயடியாய்...?

'வேறு யாரு, உங்கள் அருமை மைத்துனர்தான். இன்று ஓவர் டைமாம். அது தான்...'

'ஓ... அத்தானு...' என்று கூறியவளுக்கு மனதில் ஒருவித ஆனந்தம்.

அவளுடைய அக்காளின் கணவன் அருமைநாயகத்துக்கு திருகோணமலைத் துறைமுகத்தில் வேலை. அங்கு அவர்கள் வேலைக்கு வந்த பின்புஇரவு வேளையில் அனேகமாக கிழமையில் இரண்டு மூன்று நாட்களுக்கு மேலதிக வேலைகிடைக்கும். அப்படி அவனுக்கு இரவு 'ஓவர் டைம்' கிடைத்தால் கீதாஞ்சலிக்கு ஒரே சந்தோஷம்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து பல்வேறு ஊர்களிலும் தொழில் நிமித்தமாக குடியிருக்கும் குடும்பங்களில் ஒன்றுதான் அருமைநாயகம் குடும்பமும். சுவர்ணுவுக்கும், கீதாஞ்சலிக்கும் மூத்தவள் ஒருத்தி கொழும்பில் இருக்கின்ருள். மூன்று பெண்களுக்கும் தாய் தந்தையராக இருந்தவர்கள் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்ட போது, சுவர்ணுவுக்கு திருமணமாகி ஆறுமாதம்;

பெற்ருேர் இறந்த பின்பு மூத்த அக்காள் வீட்டிலும், மற்ற அக்காள் வீட்டிலும் மாறி மாறி இருந்து வந்தாள் கீதாஞ்சலி. அநேகமாக சுவர்ணு வீட்டிலேயே அதிகமாக அவள் தங்கியிருந்தாள்.

சுவர்ணுவும் சரி, அவளுடைய அக்காளும் சரி தங்கள் சகோதரிக்கு சிறுகவலையும் [illegible] கொண்டனர். அவள் மனதில் துன்பத்தின் நிழல்கூடப் பிடிக்கப்படாது என்பது அவர்களுடைய எண்ணம். அதேபோன்று அவளும் இருந்து வந்தாள்.

ஆனல் அவர்களிருவரும் அறிந்து கொள்ளமுடியாத ஓர் ஏக்கம், தொற்றுநோய் போல, அவளை அரித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி தனிமையில் இருப்பதும், எதையோ நினைத்து அவள் ஏங்குவதும் கல்வியின் நிமித்தமாக இருக்கலாம் என்றுதான் அவர்களால் நினைக்க முடிந்தது.

கடல்ஆழம் கண்ட பெரியோர்கள் கூட பெண்களின் மன ஆழம் காணமுடியாது என்று அறியாமலா கூறி வைத்தார்கள்?

உடன்பிறந்த அக்காள், தங்கைகளாயிருந்தால் என்ன, பிள்ளையும் தாயுமாயிருந்தால் என்ன, ஒருவர் மனதை இன்னொருவர் அறிந்துகொள்ளும் சக்தி எவருக்குமே இருந்ததில்லை. அதிலும் பெண்களுக்கு...?

இதே நினைவுதான் பிரகாஷின் மூளையையும் குழப்பிக் கொண்டிருந்தது. எவ்வளவோ நெருங்கிப் பழகிய அவனிடம் கூட புனிதம் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லையே. இரகசியமாக மறுநாள் அவளுக்கு திருமணப் பதிவு நடைபெறப் போகின்றதாம். அவளுடைய கூடப் பிறந்த சகோதரனே கூறிவிட்டுப் போகின்ருன்.

கோயிலுக்குள் நுழையும் பொழுது நிர்மலமான மனத்துடன்தானிருந்தான். அங்கே வந்த புனிதத்தின் அண்ணன் பாஸ்கர் கூறிய விடயம் அவன் மனதில் மூன்றுமாதகாலமாகக்கட்டி எழுப்பியிருந்த சிந்தனைக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்து விட்டது.

'என்னதம்பி மனதை எங்கோ அலைபாயவிட்டு விட்டீர்கள் போலிருக்கே' என்று கேட்டுக்கொண்டே விபூதியை நீட்டியபடி நிற்கும் கோயில் குருக்களைப் பார்த்து சுயவுணர்வடைந்தவனுய் கை நீட்டி விபூதியைப் பெற்றுக் கொண்டான்.

மனச்சாந்தி வேண்டி இறைவனை வணங்க வந்தவிடத்தில் மனஉளைச்சலே அதிகமாகிவிட்டிருந்தது பிரகாஷிற்கு. நினைவுகள் கனத்த மனத்துடன் கோயிலை விட்டு வெளியே வந்த பிரகாஷ் நேரே கடற்கரை நோக்கிச் சென்ருன்.

அன்று வெள்ளிக்கிழமையாகையால் கடற்கரையில் சனசந்தடியில்லை. கரையோரம், தூரத்துக்குத் தூரம் சிலர் இருந்தனர் அங்கிருந்தவர்களைப்பற்றியோ, யார் இருக்கின்ருர்கள் என்பது பற்றியோ அவன் அக்கறை காட்டவில்லை. தனிமையான ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டான். ஆனுலும அவன் மனதில் அமைதியில்லை. கடந்து விட்ட நாட்கள் மங்கலாகத் தெரியும் நிழற்படம் போல அவன் நினைவுத் திரையில் விரிந்தது.

திருகோணமலைக்கு மாற்றலாகி வந்து ஒருகிழமைக்குள் புனிதம் அவனுடன் நெருங்கிப் பழக முற்பட்டாள். ஒரே வகுப்பில் இரு பிரிவிற்கும் இருவரும்வகுப்பு ஆசிரியர்கள். அந்தமுறையில் இருவரும் நெருங்கிப் பழகினர். எடுத்ததற்கெல்லாம் 'மிஸ்டர் பிரகாஷ்-பிரகாஷ்' என்று அவனையே வலம் வந்துகொண்டிருப்பாள் புனிதம்.


அவள் பெண்களுக்குள் புனிதமானவள் என்றுதான் அவனுல் எண்ணத் தோன்றியது. அளவுடனும், அடக்கத்துடனும், தேவைக்குமட்டும மற்றவர்களோடு பேசும், பழகும் அவளுடைய எளிய சுபாவம் அவனை வெகுவாகக் கவர்ந்தது.

அவன் மனம் புனிதத்துடன் மானசீகமாக உறவாடியது. அவள் எழிலார்ந்த மேனி, பார்ப்போரை வசீகரிக்கும் காவிய நயனங்கள், முல்லை மொட்டு அடுக்கினுற் போன்ற மோகனப் பல்வரிசை, அவற்றை அணைத்து வெடித்துப் பிளந்திருப்பது போன்ற சிவந்த அதரங்கள், முன்னழகும், பின்னழகும், அவன் மனவானில் பெண்மையின் புனிதத் தன்மையே புனிதம் என்ற உருவில் வந்து சுழன்று கொண்டிருந்தது.

அவள் பேசும் போதெல்லாம் நெளித்து, களித்து சொற்களை உச்சரிக்கும்உதட்டின் அழகில் மனதைப் பறி

(10ம் பக்கம் பார்க்க)

## படிக்கத் தொடங்குமுன்....



வாசகர்களே!

முன்னுரை எழுதும் சம்பிரதாயத்துக்காக இதை நான் எழுதவில்லை. இதில் வரும் கீதாஞ்சலி என்னும் பாத்திரம் ஓர் புதிய படைப்பாக தமிழ்நாவல் உலகில் புகுத்தப் பட்டிருக்கின்ருள். 'கல்லானுலும் கணவன் புல்லானுலும் புருஷன்' என்று வாழ்ந்துவரும் தமிழ்ப் பெண்களில் இவளும் ஒருத்தியாக இருந்து கொண்டு பெண் இனத்தின் புதிராக விளங்குகின்ருள். பெண்ணே புதிரானவள் அதிலும் இவள் புரியாத புதிராக விளங்குகின்ருள்.

இவளைப் போன்றவர்கள் நமது நாட்டிலும், நகரிலும்,எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்ருர்கள். அவள்மீது வாசகர்களாகிய நீங்கள் ஆத்திரப்படலாமாயினும் அனுதாபம் காட்டுவீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

அதே வேளையில் கதாசிரியன் மீது தங்கள் வெறுப்புத் திரும்பக்கூடாதல்லவா? எழுத்தாளன் ஒழுக்கத்தைப் போதிக்கும் உபதேசியோ அன்றி ஒழுக்கக் கேட்டை வர்ணிக்கும் ஊதாரியோ அல்லன். சாதாரணமாக நாம் காணும் மேலெழுந்த வாழ்க்கையின் போக்கிற்கே சென்றுகொண்டிராது கொஞ்சம் துணிவுடன் கீதாஞ்சலியை அறிமுகப்படுத்தவே 'கர்ப்பக்கிருகம்' கட்டி எழுப்பினேன். யாவும் கற்பனையே.

—கே. எஸ். ஆ.

### கே. எஸ். ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. புலேந்திரன்,
யாழ்ப்பாணம்.

கே: நவரத்தினத்தின் புதிய கட்சி ஆரம்ப விழாவில் தொடை தெரியும்படியாக மினிஸ்கேர்ட் அணிந்த தமிழ் குமரிகள் இருவர் கீதமிசைத்தார்களே, இதுதான் தமிழர் பண்பாடா?

ப: தமிழ்ப் பண்பாடாவது,!மண்ணாங்கட்டியாவது! தனது கட்சிக் கூட்டத்துக்கு ஆட்களை கவர்ந்திழுக்க நவரத்தினம் கையாண்ட 'டெக்னிக்' ஐயா அது!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: மாநகரசபை தேர்தலில் தோல்வியுற்ற ஆலால சுந்தரம் கிளிநொச்சித் தொகுதியில் வெற்றிபெறுவாரென்பது நம்பக்கூடிய காரியமா?

ப: பெத்துநாயக்கன் பேட்டையிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு போட்டியிட்டுபடு தோல்வியடைந்த அறிஞர் அண்ணா, பின்னர் சட்டமன்றத் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்று முதலமைச்சராக வரவில்லையா?

கே: ஊர்காவற்றுறை எம். பி. தொடங்கியுள்ள புதிய கட்சி பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: 'கழகம்' என்று சொன்னால் தமிழ் மக்களுக்கு ஓர் எழுச்சி ஏற்படுகிறது. இந்த எழுச்சியை ஏற்படுத்தியது அண்ணாவின் தி. மு. கழகம். தனது துரோகக் கட்சிக்கும் கழகம் என்று பெயர்சூட்டி விடுவதால் தமிழ் மக்களை மயக்கிவிடலாம்என்று'மூளை' தப்புக் கணக்குப் போட்டுப் பார்த்திருக்கிறது. இது புலியை பார்த்துபூனைசூடுபோட்டுக்கொண்ட கதைபோல இல்லையா?

கே: டொமினியன் ஆட்சி கோருகிறாரே காவலூர் 'மூளை'?

ப: ஆமாம், ''டொமினியன்'' ஆட்சி ஏற்கெனவே சுந்தரலிங்கத்தார் வெளியிட்ட கொள்கை. டொமினியன் ஆட்சியென்ன தனிநாட்டுப் பிரிவினைக்கொள்கையையே பல தடவைகளில் தமிழ் மக்கள் நிராகரித்திருக்கிறார்கள். மக்களால் நிராகரிக்கப்பட்ட கொள்கையை மக்களால் நிராகரிக்கப்படவிருக்கும் நவரத்தினம் கொண்டிருப்பதில் ஆச்சரியமென்ன?

கே: பொதுத்தேர்தல் எப்போது நடைபெறும் என்று உம்மால் திடமாக கூற முடியுமா?

ப: நிச்சயமாக 1970ம் ஆண்டில் நடைபெறும்!

ஃ

வி. கே. வீரையா,
கல்கந்தவத்தை.

கே: காவோய் தீவில் உள்ளவர்கள் எல்லோரும் மலர்களாலேயே தங்களின் மேனியை மறைத்துக்கொள்கின்றனராமே!

ப: மறைக்கப்படவேண்டிய அங்கங்களையெல்லாம் வெளியே காட்டித் திரியும் நம்நாட்டு ஆரணங்குகளுடன் ஒப்பிடும்போது காவோய் தீவில் உள்ளவர்கள் எவ்வளவோ பரவாயில்லையே!

ஏ. ராமநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: திரு. நவரத்தினத்தின் கட்சிக்குப் பெயர் ஈழ சுயாட்சிக் கழகமா? தமிழர் சுயாட்சி கழகமா?

ப: என்ன கழகமோ அது நவரத்தினத்துக்கே இன்னும் தெளிவில்லை. டொமினியன் ஆட்சிக்கழகம் என்று பெயர் வைப்பது இன்னும் பொருத்தமாக இருக்கும்! ஏனெனில் நவரத்தினம் கோருவது சுயாட்சியல்ல: டொமினியன் ஆட்சியே!

ஃ

பொ. பத்மநாதன்,
நெடுங்கேணி.

கே: எமது கட்சிவேட்பாளர்களை தெரிவு செய்து பாராளுமன்றத்திற்கு அனுப்பினால் தமிழினம் இந்நாட்டில் இழந்த உரிமைகளை பூரணமாகப்பெற்று சுபீட்சத்துடன் வாழ வழி செய்வோம்; மூன்று வருடங்களுக்குள் அதுமுடியாது போனால் எமது பதவிகளை ராஜினாமாச் செய்யத் தயங்கமாட்டோம் என்கிறாரே பொன்னம்பலம்?

கே: கடந்த 1965தேர்தலின்போது என்ன சொன்னார் தெரியுமா? எம்மைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள்; மூன்று மாதத்துள் இழந்த உரிமைகளை பெற்றுத் தருவேன்; இன்றேல் பதவியை ராஜினாமா செய்வேன் என்றார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றினாரா என்று முதலில் அவரிடம் கேளுங்கள்! இழந்த உரிமைகள் கிடைக்கவில்லையென்று அவரே கூறுகிறார். அப்படியானால் மூன்று மாதங்களுக்குள் பதவி விலகியல்லவா இருக்க வேண்டும்! நான்கு வருடங்கள் கழிந்த பின்னும் — தமிழரசார் இந்த அரசாங்கத்தினால் பயனில்லையென்று அதிலிருந்து வெளியேறிய பின்னும் ஆட்சியாளருடன் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருக்கின்றார்களே, ஆனைப்பந்திக் காங்கிரசின் ஆயுட்கால தலைவரும் அவரது அடிமைகளும்!

ஃ

க. ஜெயானந்தன்,
மாதகல்.

கே: பணத்தாலும் பெற முடியாதது எது?

ப: உடலைவிட்டுப் பிரிந்த உயிர்.

கே: தமிழர் மத்தியில் தோன்றும் புதுக்கட்சி (சுய ஆட்சிக் கட்சி) பற்றி தங்கள் கருத்து என்ன?

ப; இந்தக் கட்சி தமிழர்களுக்கு சுதந்திரம் கோரவில்லை. எஜமான மாற்றமே கோருகிறது. அதாவது சிங்கள ஆதிக்கத்திலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு மீண்டும் செல்லவேண்டுமென்கிறது!

கே: விஞ்ஞானிக்கும் மெய்ஞானிக்கும் உள்ள வேற்றுமை யாது?

ப: விஞ்ஞானி அணுவை ஆராய்கிறான்; மெய்ஞானி அணுவுக்குள் அணுவாயிருக்கும் பரம் பொருளை ஆராய்கிறான்.

ம. கந்தையா,
வெள்ளவத்தை.

கே: கொழும்பில் அதிகமாகத் தமிழர் வாழும் பகுதிகளான கொழும்பு தெற்கு, கொழும்பு வடக்கு ஆகிய தொகுதிகளில் தமிழரசுக் கட்சி போட்டியிடும் நோக்கமில்லையா?

ப: உங்களின் இந்தக் கேள்வியை தமிழரசுத் தலைவர்களிடம் அப்படியே சமர்ப்பிக்கிறேன்.

ஃ

சு. த. சிவராஜா,
கைதடி வடக்கு.

கே: இறந்துபோன காங்கிரஸ் கட்சிக்கு உயிரூட்ட கைதடியில் குமாரசாமி படித்த இளைஞருக்கு வேலை பெற்றுத் தருவதாகவும், ஆலயப்பிரவேசப் பிரச்சினையையும் கூறி தம்மைத் தேர்தலில் ஆதரிக்குமாறு கேட்கின்றார். இதுதான் அவரது கட்சிக்கொள்கையா?

ப: குமாரசாமிக்கு கட்சியேது, கொள்கையேது? சேர். ஜோன் கொத்தலாவலையால் தமது கட்சித் தலைவரான திரு. பொன்னம்பலம் மந்திரிசபையிலிருந்து உதைத்து விரட்டப்பட்ட பின்னரும் அரை மந்திரிப் பதவியைவிடாமல் மானங்கெட்டு ஒட்டிக்கொண்டிருந்து திரு. பொன்னம்பலத்தை அரசியலில் வாலறுந்த நரி என்று வர்ணித்தவரல்லவா இந்த வீராதி வீரர்? பதின்மூன்று ஆண்டு காலம் தமிழ் மக்கள் எக்கேடு கெட்டாவது போகட்டும் என்று இருந்துவிட்டு இன்று பாராளுமன்ற கதிரை மீது ஆசைப்பட்டு ஏதோ பிதற்றுகிறார். அவருக்கு கொள்கையாவது கத்தரிக்காயாவது!

ஃ

கே. சுப்பிரமணியம்,
கொழும்பு-14.

கே: இறைவன் மனிதனைப் படைக்கும்போது விட்ட தவறு என்ன?

ப: கை,காதுமூக்குபோன்ற அவயவங்களை யெல்லாம் வெளியே தெரியும்படி வைத்தவன், இதயத்தை மட்டும் உள்ளே வைத்ததுதான். இதயத்தை வெளியே தெரியும்படி வைத்திருந்தால் நல்லவன் யார் கெட்டவன் யார் என்பதை சுலபமாக கண்டுபிடித்து விடலாமல்லவா?

ஃ

இ. தங்கராசா,
முல்லைத்தீவு.

கே: யாழ்ப்பாண எம். பி. திரு. பொன்னம்பலத்தை இம்முறை தோற்கடிக்கச் செய்யும் கட்சியும் அவரின் பெயரும் யாது?

ப: கட்சியின் பெயர்— தமிழரசுக் கட்சி. தோற்கடிக்க இருப்பவர் பெரும்பாலும் சி. எக்ஸ். மார்ட்டினாக இருக்கலாம்!

கே: மட்டக்களப்பு எம்.பி. இன்றுவரை மௌனம் சாதிப்பதன் மர்மம் என்ன?

ப: அவர் எங்கே மௌனம் சாதிக்கிறார்? கடந்த வாரம் அவர் பாராளுமன்றத்தில் விளாசியிருந்த வீர முழக்கம் சுதந்திரனிலிடம் பெற்றிருந்ததே, படிக்கவில்லையா?

ஃ

எம். ஐ. நாதன்,
முள்ளியவளை.

கே: தனிப்பெருந் தலைவர் அடுத்த தேர்தலில் நல்லூர்த் தொகுதியாமே!

ப: நல்லூர், யாழ்ப்பாணம் இரு தொகுதிகளிலும் எங்கே கேட்டாலும் படுதோல்வியடைவது நிச்சயம் என்பதை உணர்ந்துகொண்டுவிட்ட அவர், அதா இதா என்று முடிவு செய்யமுடியாமல் தத்தளிக்கிறார் கணக்கு போடுகிறாராம்!

# ஆச்சி பயணம் போகிறாள்

## சங்கப் பலகை

விலை: ரூபா இரண்டு

ஆசிரியர்: செங்கை ஆழியான்

வெளியீடு: யாழ். இலக்கியவட்டம் யாழ்ப்பாணம்.

பாதையை மறித்தது நதி. படிகம் போன்ற நீரைக் கண்டதும், வழிப்போக்கனுக்கு நீராடும் ஆசை பிறந்தது. உடைகளைக் களைந்த போது ஒரு தயக்கம். தான் நீராடும் பொழுது தனது செருப்பினை யாராவது திருடிச் சென்றுவிட்டால்?...

ஆற்றுமணலிலே புதைத்துவிட்டு, அதன் மீது அடையாளத்திற்காக ஒரு மணற் கோபுரத்தை அமைத்துவிட்டு நீராடச் சென்றான். நீராடிவிட்டு வந்து பார்த்த போது—

ஆற்றங் கரையில் எண்ணிறந்த மணற் கும்பங்கள் காணப்பட்டன. நீராடவந்தவர்கள் அனைவரும் அவன் மணற் கும்பம் அமைத்துவிட்டு நீராடியதைப்பார்த்துவிட்டு—காரணம் புரியாது—அப்படி நீராடினால் ஏதோ விசேட புண்ணியம் கிட்டும் என எண்ணித் தாங்களும் அவ்வாறே நீராடியதன் விளைவு இது.

அவன் தனது செருப்பு வைத்த அடையாளத்தை மறந்துபோய் இன்னொருவர் கும்பத்தில் கைவைக்க—

அவன் தப்பிப் பிழைத்தது பெரும்பாடாகிவிட்டது.

இப்படி ஒரு கதை. எல்லாரும் அறிந்த கதை கூட. ஆனால் இந்த நகைச்சுவைக் கதை எதனை உணர்த்துகின்றது. சிலகுறிப்பிட்ட சமுதாயத்தில் வந்துமலியும் பொருளற்ற சம்பிரதாயங்கள் எப்படி மனிதருள்ளத்தை ஆட்டிப்படைக்கின்றது என்பதனை எவ்வளவு நளினமாக, நாசூக்காக-விமர்சனத்துக்கு ஆளாகுபவர் கூட வாய் விட்டுச் சிரித்து, மனத் தெளிவு காணும்வகையிலல்லவா இச் சம்பவம் விபரிக்கப்பட்டுள்ளது? இந்த நகைச் சுவை விமர்சனத்தால் யாரும், யாரையும் நோகவில்லை. அதற்குப் பதிலாக ஒரு மனத் தெளிவு; ஒரு ஞானம் பிறக்கின்றது. அப்போது எவ்வளவு மடத்தனமானவர்கள் நாம்—என்று நம்மை நாமே விமர்சித்து வாய் விட்டுச் சிரிக்கின்றோம். இவ்வாறு தம்மைத் தாமே விமர்சிக்கும் நிலை உயர்ந்த ஞானத் தெளிவில் மட்டுமே கிட்டுவதொன்றாகும். அந்த மனத் தேற்றத்தினை மனிதகுலத்துக்கு அதன் சாதாரண நிலையிலே வழங்கும் அரும்பணியை அல்லவா இது செய்கிறது.

ஆத்ம பரிசீலனைக்கு உறுதுணைதான் நகைச் சுவை.

இத்தகைய உயர்ந்த நகைச் சுவைப் பண்பு நகைச் சுவை எழுத்து எல்லோருக்கும் இலகுவில் கைவரப் பெற்றதொன்றல்ல. அந்த நகைச் சுவையை, ஒரு பலமான சமூகப்பரிசீலனைக் கருவியாகக் கைக்கொண்டு, ஒரு முழு நகைச் சுவை நாவலையே வெளியிட்டிருக்கிறார் செங்கை ஆழியான்.

ஈழத்தில் தோன்றிய முதலாவது நகைச் சுவை நாவல் இதுவெனக் கொள்ளல் தவறாகாது. இந்த நாவலிலே ஈழத்து வடபாக மக்களின் பாரம்பரியமும் அவர்தம் கொள்கைகளும், போக்குகளும், மனோபாவங்களும் புதுமையை எதிர்கொள்ளும் கோணங்களும் நகைச்சுவையுடன் ஆழமாக பரிசிலனை செய்யப்பட்டுள்ளன.

இந்த நாவலில் வரும் 'ஆச்சி'—ஒரு பழமை வாதி தான். அவளுக்கு புதிய உலகம் ஆச்சரியமானதுதான். ஆனால் அவர் புதிய உலகின் நடவடிக்கைகளைக் கண்டு வியந்துநிற்பது நகைச் சுவையாக விளங்கும் வேளையில், ஆச்சி தொடர்ந்து ஆச்சரியத்தின் வெளிப்பாடாக உதிர்க்கும் வார்த்தைகள்— சிரிப்பினைத் தந்தாலும், அவை ஒருபுறத்தில் நம் சிந்தனையைப் பலமாக இயக்கிவிடுகின்றன. அந்தச் சிந்தனை இயக்கமே நாவலாசிரியனின் வெற்றி என்பதில் ஐயமில்லை.

இன்றைய வாழ்வு பெரும்பாலும் சம்பவங்களினடியாக நிகழ்கின்றன; பண்டைய வாழ்வு மனோஉணர்வு வழியாக இயங்கியவை. இந்த இருமுரண்பட்ட நிலைகளையும் சிவராசா நினைப்பும், ஆச்சியின் நடப்பும் நமக்குணர்த்துகின்றன. ஆச்சிக்கு ஒன்றும் புரியாது என்று எண்ணுகிறான் சிவராசா. ஆனால் ஆச்சியோ எல்லாவற்றையும் புரிந்து கொண்டு அவனே நாணும் வகையில் (செல்வி-சிவராசா இன்பப்பரிவர்த்தனைக்கு) புரிந்தும் புரியாதவள் போல இடம் கொடுத்து விடுகின்றாள்.

நாவலின் முக்காற் பகுதி வரை சிரிப்புக்கும், சிந்தனைக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லை, ஆனால், ஏனோ பிற்பகுதி வெறும் கட்டுரைத் தன்மையைப் பெற்றுவிட்டது. பிற்பகுதியில் எதற்காகவோ, ஆசிரியர் அவசரப்பட்டு நாவலை முடித்திருப்பதாகப்படுகிறது.

இந்த நாவலில் ஆசிரியரின் எழுத்து நகைச் சுவையை அள்ளிச் சொரிய, பக்கத்துக்குப் பக்கம் இடம் பெற்றுள்ள ஈழத்து நகைச் சுவை ஓவிய மன்னர் 'சௌ' அவர்களின் சித்திரங்கள் மேன் மேலும் புதிய புதிய சிந்தனைச் சிரிப்புகளை விலாவெடிக்கத் தோற்றுவிக்கின்றன. 100க்கும் மேற்பட்ட சித்திரங்களுடன், அழகான அட்டைப்படத்துடன் வெளியாகியுள்ள இந்த நகைச் சுவை நவீனம் கொள்ளை மலிவு. வாசகர்கள் நிச்சயம் பயனடையக் கூடியநூல்.

விமர்சகர்: ஐராதுஷ்டிரன்

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# நவரத்தினத்தின் சொத்தை வாதங்கள் (1)

இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கும் தமிழரசுக் கட்சிக்குத் துரோகம் புரிந்து கட்சியின் கட்டுப் பாட்டை மீறிக் கட்சியிலிருந்து வெளியேறி அரசியலில் திசைத் திசை தெரியாது தடுமாறிக் கொண்டிருந்த ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினம் இறுதியாகக் கடந்த வாரம் ஒரு புதிய கட்சியொன்றை நிறுவியுள்ளார்.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எந்தப் பிரஜையும் கட்சி நடத்துவதற்கு நமது பாராளுமன்ற ஜனநாயகம் அனுமதிக்கும்போது திரு. நவரத்தினம் புதிய அரசியல் கட்சி ஆரம்பிப்பதாலோ தாமும் ஒரு ''தமிழ்த் தலைவர்'' என்று தமக்குத் தாமே முத்திரை குத்திக் கொண்டு பவனி வருவதிலோ நமக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது.

மக்களால் பல தடவைகளில் நிராகரிக்கப்பட்டுவிட்ட திரு. சி. சுந்தரலிங்கம் இன்னும் தம்மைத் தமிழ்த் தலைவர் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும்போது மக்களால் நிராகரிக்கப்படும் வரையிலாவது திரு. நவரத்தினம் தம்மையும் ஒரு தமிழ்த் தலைவர் என்று பிரகடனப் படுத்திக் கொண்டு பவனி வந்து தன் ஆசையைத் தீர்த்துக் கொள்வதற்கு நாம் குறுக்கே நிற்க மாட்டோம்.

தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய திரு. நவரத்தினம் தமிழ் மக்கள் முன்பு எடுத்து வைப்பதற்குத் தெளிவான இலட்சியம் இன்றிக் கடந்த பல மாதங்களாகத் தடுமாறி வந்தாரென்பதை அவரது நடவடிக்கைகள் எடுத்துக் காட்டின.

சமஷ்டி அரசியலமைப்புத் திட்டத்தை ஆதரித்தால்— அது தமிழரசுக் கட்சிக்கு அளிக்கும் ஆதரவாகப் போய் விடும் என்று உள்ளூர அஞ்சினார்: இதனால் சமஷ்டி அரசமைப்பே இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு நலன் தரும் என்று உள்ளூர உணர்ந்த போதிலும் சமஷ்டியை எதிர்த்தே தீர வேண்டிய ஒரு நெருக்கடியான கட்டம் திரு. நவரத்தினத்துக்கு ஏற்பட்டது. அதன் பயனாகத் தோன்றியிருப்பதே டொமினியன் சுயாட்சி கோரும் அவரது கட்சியாகும்.

இந்த டொமினியன் அந்தஸ்துக் கோரிக்கை கூட திரு. நவரத்தினம் கண்டு பிடித்த புத்தம் புதிய கொள்கையல்ல. சொந்தக் கொள்கைத் திட்டங்களை வகுக்கும் ஆற்றல் திறமை எல்லாம் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறியவுடன் திரு. நவரத்தினத்திடம் அற்று விட்டன போலும்! 1956-ம் ஆண்டு தாம் வெளியிட்ட அதே கொள்கையையே பதின்மூன்று ஆண்டுகள் கழித்து திரு. நவரத்தினம் புரிந்து ஏற்றுக் கொண்டிருப்பதாகத் திரு. சுந்தரலிங்கம் கிண்டல் செய்திருக்கிறார்.

எனவே திரு. சுந்தரலிங்கத்தின் பழைய கொள்கையை முன் வைத்துப் புதிய கட்சியை நிறுவியிருக்கிறார் திரு. நவரத்தினம். அதுவும் முதற் கோணல் முற்றுங் கோணல் என்பது போல ஆரம்பக் கூட்டத்திலேயே ஈழ சுயாட்சிக் கழகமா, தமிழ் சுயாட்சிக் கழகமா என்று பெயர் வைப்பதிலே கூட 'மோதல்' ஏற்பட்டிருக்கிறது. (இப்படிப்பட்ட கருத்து மோதல்கள் பிரச்சினைக்குரிய விடயங்களில் கடுமையாக ஏற்பட்டால் ஒருவேளை திரு நவரத்தினம் தனது புதிய கழகத்தையே விட்டு வெளியேறி மற்றோர் கழகம் ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தி விடுவார்.)

திரு. நவரத்தினம் தமது கட்சியின் ஆரம்பக் கூட்டத்தில் மிக நீளமானதாக மிகவும் சிரமப்பட்டுப் பழைய அரசியல் சம்பவங்களையெல்லாம் கோத்துப் பக்கம் பக்கமாகத் தமது 'தலைமை' உரையைத் தயாரித்து விளாசித் தள்ளியுள்ளார்: அவரது உரையின் முக்கால் பகுதிவரை தமிழரசுக்கட்சி தொடங்கிய காலம் முதல் இன்றுவரை என்ன கருத்துக்களை எடுத்துரைத்து வருகிறதோ அதே கருத்துக்கள் தாம் அட்சரம் பிசகாமல் இருக்கின்றன. உரையின் பிற்பகுதி, தாம் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறியதற்குத் தமிழ் மக்களிடம் சமாதானம் கூறுவது போன்று அமைந்திருக்கிறது.

தமிழரசுக்கட்சி ஏதோ தனது கொள்கைகள், இலட்சியங்களையெல்லாம் கைவிட்டு விட்டது போலவும் அவற்றைத் தாமே காப்பாற்ற முன் வந்திருப்பது போலவும் தமிழ் மக்களுக்கு ஒரு படம் போட்டுக் காட்டுவதற்கு திரு. நவரத்தினம் பெருமுயற்சி செய்கிறார் என்பது அவரது பேச்சிலிருந்து தெரிகிறது.

தமிழரசுக்கட்சியின் மிக முக்கியமான—மாற்ற முடியாத—முடிவான இலட்சியம் சமஷ்டி அரசமைப்பின் கீழ் ஓர் சுயாட்சித் தமிழ் அரசை அல்லது அரசுகளை நிறுவுவதாகும்- எந்த வகையிலும், முறையிலும் பிரிவினையைக் கட்சி ஏற்கவில்லை." இந்த அடிப்படை இலட்சியமான சமஷ்டியில் நம்பிக்கையில்லை யென்று கூறிவிட்ட திரு: நவரத்தினம், தாம் தமிழரசுக்கட்சியின் கொள்கைகளையே பின்பற்றுவதாகச் சவடால் அடிப்பதன் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறாரா?

திரு. நவரத்தினம் தமிழரசுக்கட்சி மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களையும் திரு. நவரத்தினத்தின் [illegible] முடக்கு வாதங்களையும் அடுத்த வாரம் அலசுவோம்.

# நாடெங்கும் தலைதூக்கும் அராஜகம், அட்டூழியம்!

## அரசு உஷாராக வேண்டும்! இன்றேல் நாட்டில் மக்கள் நிம்மதியாக நடமாட முடியாது!

அண்மைக் காலமாக இலங்கையில் பகற்கொள்ளைகளும், வழிப்பறிகளும் கொலைகளும் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்து வருகின்றன. இலங்கைப் பிரஜைகள் தமது சொந்தநாட்டிலேயே பயமின்றி தம் உடமைகளுடன் நடமாட முடியாத ஓர் பயங்கர அராஜக நிலை உருவாகிவருவது மிகவும் வெட்கமும் துக்கமும் வேதனையும் நிறைந்ததாகும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி குடிமககளுக்கு பயமற்ற வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டிய பொலீசார் கையாலாகாதவர்களாகக் காட்சி தருகின்றனர். போதாக் குறைக்கு பொலீசாரில் பெருந்தொகையான வீதத்தினர் இலஞ்சம் வாங்குவதாக பொலீஸ் அதிபர் சில மாதங்களுக்கு முன்பு வெளியிட்ட அறிக்கையொன்று தெரிவித்தது.

சாதாரண — எந்தக்குற்றமும் செய்யாத அப்பாவியை கைது செய்து கொண்டு போய் பொலீஸ் நிலயத்தில் அவனது எலும்புகளை உடைக்கவும், சனநாயக மரபுப்படி ஊர்வலம் போகும் அரசியல் கட்சிக்காரர்களை குண்டாந்தடி கொண்டுதாக்கவும் மட்டுமே தெரிந்த நம்முடைய 'மகாகனம்' பொருந்திய பொலீசாருக்கு கொள்ளைக் கூட்டத்தினரையும், கொலைகாரர்களையும் கண்டு பிடித்துத் தண்டனைக் குட்படுத்த எங்கே நேரமிருக்கிறது? இத்தகைய சமூக விரோதிகளை பொலீசார் கண்டுபிடித்து நீதிமன்ற மூலம் தடைடித்திருந்தால் நாட்டில் சமூக விரோதச் செயல்கள் அதிகரித்திருக்க முடியுமா?

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போன்றிருக்கிறது யாழ் — மட்டுநகர் கடுகதி பஸ்வண்டிக்கு பூனை என்னுமிடத்தில் நேர்ந்த கதி, என்ன என்ன சிந்தனைகளுடன் எதிர்காலத் திட்டங்களுடன்— எத்தகைய அவசரத்தில் அந்த பஸ் வண்டியில் பிரயாணம் செய்த மக்கள் இருந்தார்களோ? அந்த மக்களிடமிருந்து மிருகத்தனமாக துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. சுமார் 40,009 ரூபா வரை கொள்ளையடிக்கப் பட்டதாக செய்திகள் கூறுகின்றன. இந்தத் தொகை இன்னும் அதிகமாகவும் இருக்கலாம்.

இந்த வழிப்பறிக் கொள்ளையுடன் சம்பந்தப்பட்டு வரும் செய்திகள் மேலும் அதிர்ச்சியளிப்பதாக இருக்கின்றன. பொலீசாரே இக் கொள்ளையிலீடு பட்டதாக பொலீசார் சந்தேகப்படுவதாகவும் இது குறித்து மேல் விசாரணை நடப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

இது உண்மையாக இருந்தால், இந்த நாட்டில் சட்டம் எங்கே? ஒழுங்கு எங்கே? சட்டத்தைபாதுகாக்கவேண்டிய பொலீசாரே சட்டத்தை மீறி மிகவும் அருவருப்பானமுறையில்— தமது உத்தியோக அதிகாரத்தைப் பயன்படுத்தி கொள்ளையடிப்பதாக இருந்தால், இதை விட வேறு கேவலம் இந்த நாட்டுக்கு தேவையில்லை; வேலியே பயிரை மேயத் தொடங்கினால் பயிர் யாரிடமிருந்து பாதுகாப்பைத் தேடமுடியும்? பொலீசாரையே பொதுமக்கள் நம்ப முடியாத நிலையல்லவா தோன்றியிருக்கிறது?

எனவே பூனை சம்பவம் மிகவும் பாரதூரமானது. இந்தநாட்டுப்பிரஜைகள் அச்சமின்றி பத்திரமாக வாழ முடியுமா? ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு தமதுஉடமைகளுடன் பத்திரமாக போய்வர முடியுமா? இதுவே இன்றுள்ள கேள்விகளாகும். பூனை சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப் பட்டு, அச்சமூக விரோதிகளுக்கு கடுந்தண்டனை வழங்கப்படவேண்டும்.

பொதுவாக நாட்டில் ஆங்காங்கே இன்று எழுந்துள்ள அராஜக நிலையைக் கட்டுப் படுத்தி மககளுக்கு பயமற்ற வாழ்வை உறுதிசெய்ய அரசு உடனடி நடவடிக்கையிலிறங்க வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

# உள்ளம் பேசுகிறதா? உதடு பேசுகிறதா?

"இன்று கொழும்பில் குளிர்மை ஊட்டப்பட்ட அறைகளில் இருந்து திட்டப்படும் திட்டங்களால் நாட்டுக்கு பயன் எதுவும் இல்லை. நாம் ஆட்சிக்கு வந்தால் அரசாங்க சேவை அதிகாரிகளை நம்பாது மக்களைக் கலந்தே திட்டங்கள் தீட்டத் தீர்மானித்துள்ளோம். நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் சபைகளை நிறுவுவோம்; மாகாண, மாவட்டரீதியில் மக்கள் மத்தியில் சென்று மக்களைக் கலந்து தீட்டும் திட்டங்கள்தான் பயனளிக்கக் கூடியவை இன்று நாம் நன்கு பாடம் படித்துவிட்டோம். இனிமேல் எதுவித தப்புகளும் எமது ஆட்சியில் நடக்காது''

-இப்படிகாத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கைப் பட்டின சபைத் தலைவர்கள் சம்மேளனத்தின் 4 வது வருடாந்த மாநாட்டில் பேசிய எதிர்க் கட்சித் தலைவியார் திருமதி சிறிமா பண்டாரநாயகா கூறியிருக்கிறார்.

இவ்வார்த்தைகள் அம்மையாரின் உதட்டிலிருந்து வராமல் உள்ளத்திலிருந்து வந்திருந்தால் இதை மிகவும் உற்சாகத்துடன் வரவேற்கிறோம்.

கொழும்பில் குவிந்திருக்கும் நிர்வாகம் மாவட்ட மாகாணரீதியில், அந்தந்த மாவட்ட அல்லது மாகாண மக்களிடம் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும்; அப்போது தான் அந்தந்தப் பிரதேச மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும், உண்மையான சனநாயகம் ஏற்படும் என்ற கருத்துக்களை இந்நாட்டிலுள்ள சகல அரசியற் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே திருமதி சிறிமாவின் கணவரான காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து பிரதேச சபைகள் நிறுவும் திட்டத்தை உருவாக்கினார். பின்னர் அதே பிரதேச சபைத் திட்டம் சிறிமா ஆட்சியின் போது மாவட்ட சபைத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது பெயர் தான் மாறியதே தவிர நோக்கம் ஒன்றாகவே இருந்தது. கூட்டரசாங்கமும் இதை ஏற்றுக்கொண்டது; 1965ல் ஆட்சிக்கு வந்த யூ. என். பியும் மாவட்ட சபைத் திட்டத்தை ஆதரித்து நகல் மசோதாவையும் தயாரித்து வெளியிட்டது.

ஆனால் இதில் வேதனைக்குரியவிடயம் என்ன வென்றால், அதிகாரத்தைப் பரவலாக்கும் மாவட்ட சபைத் திட்டம் நாட்டுக்கு நல்லது என்பதை ஒவ்வொரு அரசியற் கட்சியும் உணர்ந்து ஏற்றுக் கொண்டிருந்தும் ஓர் அரசியற் கட்சி அதைச் சட்டமாக்க முயலும்போது மற்ற அரசியற் கட்சி முட்டுக் கட்டை போட்டு வருவது தான்.

1968ம் ஆண்டு மாவட்ட சபை மசோதாவை இப்போதய அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது அதை எதிர்க்கட்சிகள் எதிர்த்ததும், எதிர்ப்பணியை உருவாக்கியதும் முற்றுமுழுதாக சுயநலம் கலந்ததுதான். நாட்டு நலனில் அக்கறையிருந்திருந்தால் எதிர்த்திருக்க மாட்டார்கள் என்று திடமாக கூறுகிறோம். நாங்கள் கொண்டுவந்த திட்டத்தை டட்லிசேனநாயகா நிறைவேற்றி பெயரைத் தட்டிக் கொண்டு போகவிடக் கூடாதென்பதும் எதிர்க்கட்சி

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியலில் தமிழரசுக் கட்சி-3

# சிறுபான்மையினருக்கு எவ்வித நன்மையும் கிடைக்காமற் செய்வதே பெரும்பான்மையினரின் நோக்கம்!

**வட இந்தியாவைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளரான டாக்டர் ஊர்மிளா பாட்டிவிஸ் எழுதியுள்ள கட்டுரையின் முதலிரண்டு பகுதியும் அடுத்தடுத்து வெளிவந்தது. இது மூன்றுவது பகுதி.**

மாவட்டசபைமசோதா கைவிடப்பட்ட துரதிருஷ்டமான சம்பவம், பல வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். எதிர்க்கட்சிகளும், சிங்களப் பொதுமக்களும் மாவட்டசபை எனும் தத்துவத்தை எதிர்க்கவில்லை. உண்மையில் மாவட்டசபை திட்டம் பண்டாரநாயகாவினால் உருவாக்கப்பட்டு சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவினால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றாகும்.

தமிழரசுக்கட்சியின் தூண்டுதலின் பேரிலேயே மாவட்டசபை மசோதா கொண்டுவரப்பட்டது என்ற காரணத்தை முன்வைத்தே, மசோதாவுக்கு எதிர்ப்பு தோன்றியது. தனது சமஷ்டிக் கோரிக்கையை வென்றெடுப்பதற்கு தமிழரசுக் கட்சியினர் மாவட்டசபைகளைப் பயன்படுத்தக் கூடும் என்று குற்றம் சாட்டப்பட்டது.

மாவட்டசபை மசோதாவின்படி, மாவட்டங்களுக்கு அதிக சுயாட்சி உரிமைஅளிக்கப்படுவதால், அந்த உரிமையைப்பயன்படுத்தி தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்குமாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டசபை மசோதா மீது பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் நடைபெற்ற வாதப் பிரதிவாதங்கள், சிங்களப் பெரும்பான்மையினரின் மனோபாவத்தை மீண்டும் ஒருமுறை படம்பிடித்துக் காட்டியது. தமிழரசுத்தலைவர்களின் அரசியல் நோக்கத்தின் மீது சிங்கள மக்களுக்குள்ள சந்தேகத்தையும், தமிழர் ஆதிக்கத்தால் சிங்களவர்கள் தங்கள் தனித்துவத்தை இழக்க வேண்டிவருமோ என்று அவர்களுக்கிருக்கும் அச்சத்தையும், தமிழ்க் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கை நாட்டுப் பிரிவினைக்கு வித்திடக் கூடும் என்ற அவர்களின் சந்தேகத்தையும் அவை எடுத்துக் காட்டின. சிங்களப் பகுதியிலும் தமிழ் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழரசுக்கட்சித் தலைவர்கள் விடுத்த அறிக்கை இந்த ஐயத்தை இன்னும் தூண்டியது.

மாவட்டசபைக்கு ஏற்பட்ட எதிர்ப்பும், ஈற்றில் அது வாபஸ் பெறப்பட்டதும், சிறுபான்மை மக்களுக்கு சார்பானதென்று கருதப்படும் எந்த ஒரு விஷயத்திலும் சிங்களப் பெரும்பான்மையினர் கொண்டுள்ள மனோபாவத்தை மிகவும் துலாம்பரமாக காட்டி விட்டது.

மாவட்டசபை மசோதா தவிர, அரசாங்கத்திலிருக்கும் சிறுபான்மையோர் கட்சி என்ற முறையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏனைய பிரச்சனைகளையும் தமிழரசுக்கட்சி சமாளிக்க வேண்டியிருந்தது. உதாரணமாக அது திருகோணமலை துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டதைக் கடுமையாக எதிர்த்தது. இப்படி எதிர்த்ததற்கு அது கூறிய காரணம் அப்பகுதியில் மத்திய ஆட்சியின் ஆதிக்கம் மேலும் திணிக்கப்படும் என்று கூறப்பட்டாலும் துறைமுகத்தில் வேலை வழங்கும் அதிகாரம் தேசிய மயசேவை அமைச்சரின் கீழ் வருவதால் தமிழர்களை விட சிங்களவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு வழங்கப்படலாம் என்று அஞ்சியதே உண்மையான காரணமாகும்.

தமிழரசுக் கட்சியின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் அரசாங்கம் திருமலைத் துறைமுகத்தைத் தேசிய மயமாக்கியது. தமிழரசுக்கட்சி தமிழ்ப்பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்படவேண்டுமென்று கூறியது. இது கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டதும்திட்டம் ஏற்படுத்தப்படவில்லை. இறுதியாக, அரசாங்கம் தமிழ் மொழி விதிகளை நிறைவேற்றிய போதிலும் அவற்றை அமுல் நடத்துவதில் அந்தரங்க சுத்தியுடன் ஈடுபடவில்லை என்று தமிழரசுக் கட்சியால்உணரப்பட்டது.

இந்த நிலைமை தமிழரசுக் கட்சியின் சாதாரண உறுப்பினர்களிடையே விரக்தியைத் தோன்றச் செய்தது. குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் அரசாங்கத்துக்குள் கட்சி இருப்பதால் தமது கோரிக்கைகளுக்காக தீவிரமாகபோராடமுடியாதநிலையில் இருப்பதாகக்கருதினர்.

## மாவட்ட சபை கைவிடப்பட்டது இந்த உண்மையை உணர்த்தியது!

இந்தப் பின்னணியிலேயே 1968ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தமிழரசுகட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறியது. தமிழரசுக் கட்சிக்கும். ஐ. தே. கட்சிக்கும் இடையே நெருக்கடியை ஏற்படுத்திய உடனடிப் பிரச்சினை கோணேஸ்வரம் கோவிற் பிரச்சினையாகும். ஆனல் முன்பு தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடிகளுடன் ஒப்பிடுகையில் இது ஒரு சாதாரண பிரச்சினையே.

அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சியை வெளியேறச் செய்த கோணேஸ்வரம் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் மிகவும் சாதாரணமானது. 1968ம் ஆண்டு ஆரம்பத்தில் கோணேஸ்வரம் ஆலயம் அமைந்திருக்கும் பிரடெரிக் கோட்டைப்பகுதியை இந்துக்களின் புனிதநகரமாக்க வேண்டிய ஆலோசனையை நடத்துவதற்கு திருச்செல்வம் ஒரு குழுவை நியமித்தார். இதற்கிடையில் ஒர் பௌத்தபிக்கு கோணேஸ்வரம் கோவில் பௌத்தர்களின் பழைய வழிபாட்டுத் தலமென்றும் அக்கோயில் சிங்கள பௌத்தர்களல்லாத வேறேரினத்திடம் கையளிக்கப்பட இருப்பதாகப் பிரதமரது கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

பிரதமர் விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த உத்தரவிடுமாறு திரு. திருச்செல்வத்திற்குக் கடிதம் எழுதினர். தனது நிர்வாகத்தின் கீழ் வரும் பிரடெரிக் கோட்டை பற்றி ஆராய்வதற்கு ஓர் குழுவை நியமிக்குமுன் அமைச்சர் தம்மைக் கலந்திருக்க வேண்டுமென்று பிரதமர் புகார், கூறினர். இதற்குப்பதிளளித்த திரு. திருச்செல்வம் அக்கோவில் இராணுவப் பகுதிக்குள் வருவதாகப் பிரதமர் அதற்குமுன் கூறவில்லையென்றும் அதை ஒரு புனித நகராகப் பிரகடனப்படுத்துவது எந்தவகையிலும் நாட்டுப் பாதுகாப்பிற்குப் பாதகமானதல்லவென்றும் கூறினர். உண்மையில் பிரதமரிடமிருந்து தேவையான நடவடிக்கையெடுக்கும்படி குறிப்புஅனுப்பப்பட்டதாலேதான் திருச்செல்வம் நடவடிக்கை எடுத்தார் இத்தகைய சூழ்நிலைகளில் தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி பாராளுமன்றத்தில் தனிக்குழுவாக இயங்குவதென்றும் தமிழ் பேசும் மக்களுக்குப் பாதகமற்ற சகலவிடயங்களிலும் அரசாங்கத்தை ஆதரிப்பதென்றும் தீர்மானித்தது.

—வளரும்

# தீவுப்பகுதி அபிவிருத்தி சங்ககூட்டம்!

## குழப்புவதற்கு நடந்த சதி தோல்வி!!

தீவுப்பகுதி மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு உழைப்பதற்காக ஒரு சங்கத்தை தொடங்குவதற்கு கிளிநொச்சிப் பா. உ. கா. பொ. இரத்தினம் கொழும்பில் நடத்திய கூட்டத்துக்கு கொழும்பின் பல பகுதியில் இருந்தும்பல நூற்றுக்கணக்கான தீவுப்பகுதி மக்கள் சமூகளித்து அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர்.

தினபதி, தமிழ் உலகம், விடுதலை போன்ற ஏடுகள் மூலம் திரு. இரத்தினத்தையும், தமிழரசுக்கட்சியையும் திட்டித் திட்டி வயிறு வளர்க்கும் பட்டிணிக் கும்பல் இக்கூட்டத்தைக் கலைக்கச் சதித்திட்டம் திட்டியது. 'தங்கள் கையாட்கள் இரண்டு பேரையும் கூட்டத்துக்கு அனுப்பிவிட்டு வெளியிலும் வீதியிலும் உள்ள மறைவிடங்களில், கூட்டம்முடியும்வரைக்கும் காத்துக் கொண்டு நின்றது.

இறந்து போன எழுத்தாளர் மன்றத்தின் பெயரைச் சொல்லி, திரு. இரத்தினத்திற்கும் நாவலர் விழாச் சபைக்கும் எதிராகச் சதி செய்த அதே கும்பல், இல்லாத மூன்று சங்கங்களின் பெயரைக் கொண்ட கைத்துண்டு சிலவற்றுடன் கூட்டம் நடந்த மேல்மாடிக்குக் கீழே பொது மக்கள் நுழை வாயிலில் பொதுமக்களோடு பொது மக்களாகக் கலந்து நின்றது.

இவர்களின் நோக்கத்தை அறிந்து கொண்ட தீவுப்பகுதி இளைஞர்கள், அவர்கள் நின்ற இடத்தில்பேசிய பேச்சைக் கேட்டவுடன் நிலைகலங்கிநின்ற இடம் தெரியாது கலைந்து விட்டனர்.

தீவுப்பகுதிபொருளாதார [illegible] பெயருடன் அமைக்கப்பட்டுள்ள இச்சங்கத்தின் தற்காலிக தலைவராக திரு. ஈ. வி. தளையசிங்கமும், செயலாளராக வழக்கறிஞர் திரு. பி. துரையப்பாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் ஒரு மாதத்தில் மீண்டும் கூடி தனது கொள்கைகளை வகுக்கும்.

# விஷமிகளின் பொய்ப் பிரசாரம்

சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் கடந்த 12 ம் திகதி காலை நடைபெறவிருந்த கலை விழா காலை நிகழ்ச்சிகள் அன்று ஆடி அமாவாசை தினமென்ற காரணத்தால் ரத்துச் செய்யப்பட்டு மாலை ஆறுமணிக்கு நடைபெற்றது.

விழாவிற்கு ஆயிரக் கணக்கான மக்கள் வருகை தந்து சிறப்பாக நடைபெற்றிருக்கையில் தனிப் பெரும் தலைவரின் துதி பாடும் தறுதலைப்பத்திரிகை யொன்று தமிழரசுக் கட்சியைசேர்ந்தவர்கள் நடாத்திய கலை விழா காலை நிகழ்ச்சிகளை மக்கள் பகிஷ்கரித்தார்கள் என பொய்யுரை புனைந்துள்ளது.

விழா நடத்தி மக்களை வரவேற்கத் தெரியாத ஒரு சில காங்கிரஸ் விஷமிகளின் பொய்ப்பிரச்சாரத்திற்கு தூபமிடுகிறது தமிழர்களை காட்டிக் கொ[illegible] டப்பரின் பத்திரிகை.

(சாவகச்சேரி நிருபர்)

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு



டொலர்
அலுமினியப்பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 டாம் வீதி; கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கே தமிழ் மக்களை ஏமா
# இங்கு பாராளுமன்றத்தில் மட
# பூரண பல்கலைக்கழகம

## மதக் கூச்சலால் தமிழினம் பிளவுபட அனுமதிக்கமாட்டோம்!

[ஆகஸ்ட் 23ந் திகதி பாராளுமன்றத்தில் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு முழுவதும் இங்கு இடம் பெறுகிறது.]

இந்த அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு செலவுத் திட்ட விவாதத்திலே எதிர்க் கட்சி வரிசையிலேயிருந்து பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையொட்டி நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த வரவு செலவுத்திட்ட விவாதம் நடந்து கொண்டு வருகின்ற விதத்தைப்பார்த்தால் வரவு செலவுத்திட்டத்தைப் பற்றியோ நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றியோ நடக்கின்ற பேச்சு மிகக் குறைவாகவும், அடுத்த தேர்தலுக்கான ஒத்திகையாகக் கட்சிகளுக்கிடையிலே ஏற்படுகின்ற மோதல் நடக்கின்ற பேச்சு அதிகமாகவுமிருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. அந்த மோதலும் இரண்டு பிரிவாக இந்தச் சபையிலே நடந்து கொண்டிருக்கின்றது.

ஒரு புறத்திலே ஆளும் கட்சியிலேயுள்ள ஐக்கியதேசியக் கட்சியினருக்கும் எதிர்க் கட்சியிலே உள்ள கூட்டாட்சிக் கட்சியினருக்கும் இடையிலே ஒரு மோதல் நடைபெறுகின்றது. இன்னொருபுறத்திலே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பிரதிநிதிகளாக இருப்போரில் அரசாங்கக் கட்சியில் இருப்பவர்கள் ஒருபுறமாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் மறுபுறமாகவும் இன்னொரு மோதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

### தேர்தல் பேச்சுக்கள்

உண்மையிலேயே, அடுத்த பொதுத் தேர்தலிலே தென்னிலங்கையிலே எந்த எந்தக் கொள்கைகளின் அடிப்படையிலே தேர்தல் போராட்டம் நடைபெறப்போகிறதென்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர்களும் கூட்டாட்சிக் கட்சியின் பேச்சாளர்களும் பேசுகின்ற பேச்சுக்களிலிருந்து நாம் காணக் கூடியதாக இருக்கிறது. அதே போலவடக்கு, கிழக்கு மாகாணங்களிலே அடுத்த தேர்தல் எந்த அடிப்படையிலே நடைபெறப் போகிறதென்பதை எடுத்துக்காட்டுவது, போல அரசாங்கக்கட்சியிலே உள்ள தமிழ்க் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் பேச்சும் அங்குள்ள ஒரே ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் அங்கத்தவரான கற்குடாப் பிரதிநிதி வே. டபிள்யூ. தேவநாயகம் அவர்களுடைய பேச்சும் அமைந்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தச் சபையிலே மிகவும் அனுபவம் முதிர்ந்த, பழம் பெரும் அங்கத்தவராக இருக்கின்ற யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை மறந்து தமது பேச்சு முழுவதையும் அடுத்த யாழ்ப்பாணத் தேர்தலுக்கு ஒத்திகையாகவே இங்கே நடத்தியிருக்கிறார் என்பதை நாங்கள் கவனத்திலெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### தமிழரசை தாக்கினர்

அவரைத் தொடர்ந்து பேசிய வவுனியாப் பிரதிநிதி ரி. சிவசிதம்பரம் அவர்களும் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பேசிய கற்குடாப் பிரதிநிதி அவர்களும் அதே தோரணையிலேயே, தமிழரசுக் கட்சியைத் தாக்குவதை நோக்கமாகக் கொண்டு தமது பேச்சுக்களை நிகழ்த்தினார்களே தவிர, அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தையோ அதையொட்டி எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த குற்றச்சாட்டுக்களையோ பற்றி அவர்கள் எதுவும் பேசவில்லையென்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்கள் குறிப்பிட்ட இரண்டு முக்கிய விடயங்களுக்கு நான் இங்கே சுருக்கமாக பதலளிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன்.

### ஒரு விசித்திரம்

தமது கோரிக்கையான இராமநாதன் பல்கலைக் கழகத்தைப் பற்றி அவர் குறிப்பிட்டார். இதிலேயுள்ள விசித்திரமென்னவென்றால், 1966ம் ஆண்டு இந்து கலாசாரப் பல்கலைக்கழகம் என்று ஆரம்பித்த யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்களுடைய இயக்கம் இன்று மாறி பூரணத்துவம் பெற்ற ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று வந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்: பாராட்டுகிறோம்.

முன்பு மதத் துவேஷ அடிப்படையிலே ஆரம்பித்த தமது இயக்கத்தைத் தேர்தல் நெருங்கி வருவதை உணர்ந்து—கத்தோலிக்க வாக்காளர்களைப் பெரும்பாலாகக் கொண்ட யாழ்ப்பாணத் தொகுதியிலே தாம் போட்டியிடுவதால் கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்களுக்கு, மாறான இந்து பல்கலைக் கழக இயக்கத்தைக் கொண்டு நடாத்த முடியாது என்று கண்டு, இப்பொழுது பூரணத்துவம் பெற்ற ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று முதன் முதலாக இச்சபையிலே இவ்வருட வரவு செலவுத்திட்ட விவாதத்திலே யாழ்ப்பாணப் பிரதிநிதி எடுத்துக் கூறி இருக்கின்றார்.

### வரவேற்கிறோம்

நான் முன்பு கூறியது போல அவருக்கு ஏற்பட்டிருக்கும் இந்த மனமாற்றத்தை நாம் வரவேற்கிறோம்; இப்பொழுது அவருக்கும் எங்களுக்கும் இடையில் இருக்கும் சர்ச்சை இந்த பூரணத்துவம்வாய்ந்த பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்திலே நிறுவுவதா அல்லது திருமலையிலே நிறுவுவதா என்பதில்தான் போல் தோற்றுகிறது.

### வரலாறு

இந்தச் சந்தர்ப்பத்திலே இலங்கையிலே தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தின் வரலாற்றை நான் மிகவும் சுருக்கமாக இங்குகூறிவைக்க வேண்டி இருக்கின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்திற்குக் கொடுத்து இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

### அந்த நேரத்தில் எதிர்க்கவில்லை

இந்த நேரத்திலே யாழ்ப்பாணத் தொகுதிப் பிரதிநிதி இச்சபை அங்கத்தவராக இருந்தார். அப்பொழுது இந்த இயக்கத்திற்கு விரோதமாக அவர் எதுவும் சொன்னது கிடையாது. இந்தப் பாராளுமன்றத்தில் அவர் இந்த இயக்கத்தை எதிர்த்தோ அல்லது இன்று அவர் கூறும் இந்துப் பல்கலைக் கழ

வேண்டுமென்ற நோக்கத்தோடு விவசாயக் கல்லூரியைத் திருகோணமலையிலே அவர்கள் கட்டி, இன்றும் ஒரு சில மாணவர்களோடு அங்கு வகுப்பு நடைபெற்று வருகின்றது.

1959ஆம் ஆண்டு இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குத் திருகோணமலையிலே பெருந் திருவிழாவாக அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. அந்த நேரத்திலே யாழ்ப்பாணப் பிரதிநிதி எங்கே போயிருந்தாரோ எனக்குத் தெரியாது. ஆனால், அவரது கட்சியைச் சார்ந்த சாதாரண அங்கத்தவர்கள் அத்தனை பேரும் அதனை வரவேற்றார்கள். அதற்கு மாறாக ஒருவராவது தமிழ் மக்கள் மத்தியிலே குரல் எழுப்பியது கிடையாது. இதை எந்தத் தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தவரும் மறுக்க முடியாது.

அந்த நேரத்திலே நாம் அதனை அரசியல் கோரிக்கையாகச் சமர்ப்பிக்கவில்லை.

இந்தத்
ரால் என்ன
ரஸ் அங்க
என்ன, அ
பிரதிநிதி
ஒரு சிறுப
த்தின் பிர
கிறோம்.
இன்னும்
உரிமை செ
த ங்கே
சமானமா
நிலை ஏற்ப
சுய அறி
மறுக்க மா

அந்த நி
செய்ய நா
ஒன்றுபட்டு
வேண்டிய
வந்து கண்
பொறுப்பு
வம் முதிர்ந்
பிரதிநிதி
தேவையற்
இந்தச் சபை
விட்டு, 'ெ
கண்ணுக்கு
தொமபேப்
டயஸ்
கோட்டேப்
ஸ்ரான்லி
றவர்கள் எ
—தமிழ்ப் பி
பார்த்து—
நடத்த வே
இங்கே கொ
துகிறார்கள்
நகையாடக்
நடந்துகொ
கொள்வது
வேதனைப்ப
களாக இரு
கத்தினால்
டியவர்களா

நாம்
வை

சபாநாய
நீங்கள் கவ
சிம்மாசன
நான் பேசி
தத் தமிழ்ப்
பற்றியோ,
கட்சியைப்

## தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் வளர்ந்த வரலாறு!

1956ஆம் ஆண்டில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட சூழ்நிலையில், இலங்கையில் தமிழ்பேசும் மக்களுடைய கலை கலாசாரத்தை பாரம்பரியத்தைச் சிதைத்து, அவர்களுடைய தனித் தன்மையை அழித்து, அவர்களை வேரோடு ஒழித்துக் கட்ட இந்த நாட்டிலே அன்று ஆட்சிக்கு வந்தவர்கள் முனைந்து நின்ற வேளையிலே இந்தநாட்டிலே உள்ள தமிழ் பேசும் மக்கள் தமக்கு ஒரு அரசியல் இயக்கம் மாத்திரம் போதாது, தமது பண்பாட்டை, கலையை, கலாசாரத்தைப், பேணிக்காக்க பூரணத்துவம் பெற்ற ஒரு பல்கலைக்கழகமும் அவசியம் வேண்டுமென்று எண்ணினார்கள்.

### இயக்கம் தொடங்கியது

இப்படி எண்ணியவர்கள் ஒரு பல்கலைக்கழக இயக்கத்தையும் ஆரம்பித்தார்கள். இதுஎங்கள் கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இயக்கம் அல்ல. பல்கலைக்கழகப்பேராசிரியர்களாக இருந்த பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள், பேராசிரியர் எலியேசர் அவர்கள், பேராசிரியர் மயில்வாகனம் அவர்கள், இன்று மலேசிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கின்ற வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் போன்றவர்கள், இந்த நாட்டின் உயர்தர நீதி அரசர்களாக விளங்கிய காலஞ்சென்ற ஸ்ரீ. ஸ்ரீஸ்கந்தராசா, சின்னத்தம்பி போன்றவர்கள், மேலும் அரசாங்க சேவையில் பல்வேறு அங்கங்களிலும் உயர்தர பதவிகளில் இருந்த தமிழ் மக்கள், இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் பிரமுகர்கள், எல்லோரும் ஒன்றுசேர்ந்து [illegible] நாட்டின் [illegible] ஆயிரக்கணக்கான ரூபாக்களைத்

கத்தை முன்நிறுத்தியோ எந்தவிதமான கோரிக்கையையும் அவர் சமர்ப்பித்தது கிடையாது.

1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடு, இந்த உத்தேச தமிழ்ப் பல்கலைக்கழகத்தை எங்கே, எப்படி அமைக்கலாம் என்று தீரயோசித்து ஒரு முடிவுக்கு வந்தது.

அது கட்சிச் சார்பற்ற, அரசியல் தொடர்பற்ற, கல்விமான்களுடைய, தமிழ் மக்களின் வருங்காலக் கல்வியில் அக்கறை கொண்டவர்களுடைய இயக்கமாகவே நடைபெற்று வந்தது. அவர்களது அழைப்பின் பேரில் நாமும் கலந்துகொண்டோம். அவர்களது அழைப்பின் பேரில் முன்னாள் வவுனியாப் பிரதிநிதியும் கலந்துகொண்டார். அவர்களுடைய அழைப்பின் பேரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்

## தமிழ்மொழி உரிமையை நிலைநாட்
## தமிழ் காங்கிரஸ் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தது?

### மத்திய இடம்

தமிழ்பேசும் மக்கள்பாரம்பரியமாக வாழும் பூமியாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மத்தியான இடத்தில் இந்தப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்று தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கம் முடிவு செய்தது. இந்த முடிவின்படிதான் திருமலையிலே நிலத்தை வாங்கினார்கள். தமிழ் மக்கள் விரும்பிக் கொடுத்த பணத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான நிலத்தை அங்கே வாங்கினார்கள்.

அங்கே, முதன் முதலில், வெறும் ஏட்டுக் கல்வி உதவாதென்று விவசாயத்துறையிலே பட்டம் பெறக் கூடியவர்களைப் பட்டம் பெறச் செய்து எமது மக்களுடைய வருங்காலத்தைப் [illegible] தொழில், விவசாயத் துறைகளிலே கூடுதலாகத் திருப்ப

ளூராட்சி மன்றங்கள் அத்தனையினதும் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். தமிழ் பேசும் இனத்தவர்களின் ஒரு பெரு விழாவாக அன்று அது நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலும் கிழக்கு மாகாணத்திலுமுள்ள பல்வேறு கல்லூரிகளின் அதிபர்கள் எல்லோரும் அதில் கலந்து கொண்டார்கள். எமது இனத்தவர்களுடைய உயர்தரக்கல்விக்கு ஒரு கால்கோள் விழாவாக அந்த விழா எடுக்கப்பட்டது.

### வேதனை வெட்கம்

அந்த நேரத்தையெல்லாம் மறந்து, இன்று வந்து ஏதோ புதிதாகத் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தைப் பற்றி நாம் பேசினோம் என்று யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்கள் கூறுவது வேதனைப் படவேண்டிய ஒன்றாகும்.

சொல்லாவ
சாங்கத்து
உள்ள வழ
எடுத்துக்
அதைவிட்
சொல்ல
யில்லை என்

தமிழ்க்
தவர்களுக்
கற்குடாப்
ளுக்கு மாறு
ஊர்காற்று
க்கு மாறு
நா சொ
அதை நா
திலே,
மாகாணங்
என்று தா

ஆனால்,
தும் அம
காவற்றுறை
குடாப் பிர
டிப் பிரதி
தங்கள் கட்
தமிழ்ப் பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்ற இந்து பல்கலைக்கழகம் ...ட்டும் ...மா?

## பொன்னம்பலத்தைக் கேட்கிறார்

## அமிர்தலிங்கம் எம். பி.



இந்தத் சபையில் நாம்என்
...ல் என்ன, தமிழ்க் காங்கி
...ஸ் அங்கத்தவர் களென்றால்
...ன்ன, அல்லது கற்குடாப்
...ிரதிநிதி என்றால் என்ன,
...ரு சிறுபான்மைச் சமுதாய
...தின் பிரதிநிதிகளாக இருக்
...றோம். இந்த நாட்டிலே
...ன்னும் எமது சமுதாயம்
...மை பெற்று மற்றச் சமு
...ங்களோடு சரிநிகர்
...மானமாக வாழவேண்டிய
...லை ஏற்படவில்லை என்பதை
...ய அறிவுள்ள எவனும்
...றுக்க மாட்டான்;

அந்த நிலையை ஏற்படச்
...சய்ய நாம் அத்தனை பேரும்
...ன்றுபட்டுக் குரல் எழுப்ப
...வண்டிய நிலையிலே, இங்கே
...ந்து கண்ணியம் மிக்க,
...பாறுப்பு வாய்ந்த, அனுப
...ம் முதிர்ந்த யாழ்ப்பாணப்
...ிரதிநிதி போன்றவர்கள்
...தவையற்ற வாதங்களை
...ந்தச் சபையிலே கிளப்பி
...ிட்டு, 'தெருவில் சண்டை
...ண்ணுக்குச்குளிர்ச்சி' என்று
...தாயபேப் பிரதிநிதி திரு.
... யஸ் பண்டாரநாயக்க,
...காட்டேப் பிரதிநிதி திரு.
...ஸ்ரான்லி திலகரத்ன, போன்
...வர்கள் எங்களைப் பார்த்து
...—தமிழ்ப் பிரதிநிதிகளைப்
...ார்த்து—'இவர்கள் அங்கே
...டத்த வேண்டிய மோதலை
...ங்கே கொண்டுவந்து நடத்
...கிறார்கள்' என்று எள்ளி
...கையாடக்கூடியவகையிலே
...டந்துகொண்டது, நடந்து
...காள்வது பற்றி நாங்கள்
...வதனைப்பட வேண்டியவர்
...ளாக இருக்கிறோம்; வெட்
...த்தினால் தலைகுனியவேண்
...யவர்களாக இருக்கிறோம்.

### நாம் யாரையும் வையவில்லை

...சபாநாயகர் அவர்களே,
...ங்கள் கவனித்திருப்பீர்கள்;
...ம்மாசனப்பிரசங்கத்தில்
...ான் பேசிய பொழுது எந்
...த் தமிழ்ப் பிரதிநிதியைப்
...ற்றியோ, எந்தத் தமிழ்க்
...ட்சியைப் பற்றியோ ஒரு
முறையில் பேசுகின்றோம் என்று எழுந்தாலும் தமிழ் இனத்தைப் பற்றியோ, அவர்களுடைய பிரச்சினையைப் பற்றியோ பேசாமல் என்னையும் எமது கட்சியின் நிலையையும் தாக்குவதையே நோக்கமாகக் கொண்டு எனது பேச்சுக்குப் பதில் அளிப்பதாக அவர்கள் பேசினார்களே தவிர, வேறு ஒன்றும் பேசவில்லை. உண்மையில் அது அவர்கள் தமிழ் இனத்துக்குச் செயும் படுபாதகமான செயல் என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

### நமக்குள்ளே பேசித் தீர்ப்போம்

தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்பதைப் பகுத்தறிவு படைத்த எந்தத் தமிழ் மகனும் ஒத்துக் கொள்வான் என்பதை நான் பல்கலைக்கழக இயக்கத்தைப் பற்றிப் பேசுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுதுள்ள பல்கலைக் கழகங்களிலே எமது மாணவர்கள் இரண்டாந்தர மக்களாகப் படும் கஷ்டங்களை நாம் அறிவோம்.

அவர்கள் நிமிர்ந்து நின்று சுயாதீனமாக, தமது உரிமையோடு பல்கலைக் கழகக் கல்வியைக் கூடப் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் பூரணத்துவம் பெற்ற வளர்ச்சி பெற, கலாசார வளர்ச்சி பெற, மன வளர்ச்சி பெறக்கூட வாய்ப்புக்கள் அற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த விதமான ஒரு சூழ்நிலையிலே எமக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்றால், அதை நிறுவும் இடத்தைப் பற்றி ஏதாவது கருத்து வேற்றுமை இருந்தால், நாம் நமக்குள்ளேபேசி அதைத் தீர்த்துக் கொள்ளலாம். அதைத்தான் நான் யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்களுக்குக் கூறுகிறேன்.

### கல்குடா எம். பி. கையெழுத்திட்டார்.

இந்த அரசாங்கம் அமைக்கப்பட்ட சில நாட்களில் பதினெட்டு அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டுப் பிரதம அமைச்சர் அவர்களுக்கு ஒரு மனுவைக் கொடுத்தோம்; தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்று கற்குடா பிரதிநிதியும் அதில் கையெழுத்திட்டிருந்தார், அவர் ஒரு வழக்கறிஞர்; அவருக்கு எழுதப் படிக்க நன்றாகத் தெரியும் என்று நம்புகிறேன். அதை அவர் வாசிக்காமல், வாசிக்கத் தெரியாமல், கண்ணாடி இல்லாமல் கையெழுத்திட்டிருக்க மாட்டார்; நிச்சயமாக அதனை வாசித்துத்தான் கையெழுத்திட்டார்.

அதிலே, நாம் திட்ட வட்டமாகத் திருகோணமலை என்று கேட்கவில்லை. கிழக்கு மாகாணத்திலே, வடக்கு மாகாணத்திற்குச் சமீபமாக இருக்கிற ஒரு இடத்திலே தமிழ் பேசும் மக்களுக்குப் பூரணத்துவம் பெற்ற ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்றுதான் அதிலே நாம் கேட்டிருந்தோம். அதை முழு மனதாக ஆதரித்துத்தான் கற்குடாப் பிரதிநிதியும் கையெழுத்திட்டிருக்கிறார். அவர் தம்முடைய சுய கௌரவத்தைக் கூட விட்டு அப்படி நான் அறியாமையாலே நடந்து கொண்டேன் என்று கூறமாட்டார் என்று நிச்சயமாக நம்புகிறோம்;

### அமைப்பு

திருகோணமலை என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை என்ற கருத்திலே அவர் கூறியிருப்பார் என்று நம்புகிறேன். பின்பு பிரதம அமைச்சர் அவர்களுடன் தொடர்புகொண்டு பல்கலைக் கழகம் வேண்டும் என்று கேட்ட பொழுது நாங்கள்கொடுத்த அமைப்பு எப்படி என்பதை நான் இங்கே கூறவேண்டியிருக்கிறது.

திருகோணமலையைத் தலைமை ஸ்தானமாகக் கொண்டு அங்கே விஞ்ஞானம், பொறியியல், விவசாயக் கல்வி கற்பிக்கின்ற நிலையமும், பல்கலைக் கழக நிர்வாகமும் அங்கு அமையவும், மட்டக்களப்பிலே, நண்பர் கற்குடாப் பிரதிநிதி அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த வந்தாறுமூலையிலே கலைப் பகுதியும், யாழ்ப்பாணத்திலே வைத்தியக் கல்லூரியும் அமையவும் அந்தப் பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய அமைப்பு.

யாழ்ப்பாணப் பிரதிநிதி இராமநாதனுடைய சொத்து, மழவராயருடைய சொத்து, நாவலருடைய சொத்து என்றெல்லாம் பட்டோலை வாசித்தார். அந்தப் புண்ணியவான்கள் விட்டுச் சென்ற சொத்துக்களை வருங்கால சந்ததியினர் நினைக்கக் கூடியதாக அந்தப் பட்டியலை ஹன்சாட் புத்தகத்திலே பொறித்தது மகிழ்ச்சிக்குரியதுதான்.

### கறிக்கு உதவாது

ஆனால் அந்தப் பட்டோலை—ஏட்டிலே எழுதப்பட்டிருக்கிற அந்தப்பட்டியல் கறிக்கு உதவாது. ஏட்டிலே இனிப்பு என்று எழுதிவிட்டு அதை நாவினால் நக்கினால் இனிக்க மாட்டாது;

சபாநாயகரவர்களே! இதைப்போன்றதுதான் இந்தச் சொத்து விஷயமும். அந்தச் சொத்துக்களின் பெரும் பகுதி இன்று அரசாங்கத்துக்கு உரிய சொத்துகளாக்கி விட்டன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சிலையை அவர் விட்டுச் சென்ற காணியில் கல்வி அமைச்சர் அவர்கள்அனுமதி கொடுத்துத்தான் அமைக்க வேண்டி வந்தது.

### நகைப்புக்கிடமானது

அது மாத்திரமல்ல. அந்த இடத்திலே ஒரு பரப்பு; இந்த இடத்திலே இரண்டு பரப்பு; இன்னும் ஒரு இடத்திலே முக்கால் பரப்பு இப்படியானவைகளையெல்லாம் சேர்த்துப் பிடித்து கணக்குப் பார்த்து ஒரு பெரிய பட்டோலை போட்டு இத்தனை சொத்துக்களும் வீண் போகின்றன. அதைக் கொண்டு ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்கலாமே என்றுகேட்பதுநகைக்கத் தக்கது;

தமிழ் பேசும் மக்களுக்கு பூரணத்துவம் பெற்ற ஒரு பல்கலைக் கழகம் வேண்டும்; அந்தப் பல்கலைக் கழகத்தின் அங்கமாக இந்துகலையை, இந்து கலாசாரத்தை, நுண்கலைகளைகற்பிப்பதற்கு யாழ்ப்பாணத்திலே ஒரு நல்ல கல்லூரியை நிறுவுவதற்கு நாங்கள் பூரணமாகஆதரவளிக்க ஆயத்தமாக இருக்கிறோம்; அதற்கு யாழ்ப்பாணப் பிரதிநிதியோடு ஒத்துழைக்க நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். நாம் அமைக்க விரும்புகின்ற பல்கலைக் கழகமும் அப்படியானதுதான்;

### பிரிவினை வேண்டாம்

எனது நண்பர் உடுவில் பிரதிநிதி வீ. தர்மலிங்கம் யாழ்ப்பாணப் பிரதிநிதியைத் தொடர்ந்து பேசிய பேச்சிலே கூறியதுபோல, இந்தப் பல்கலைக் கழகத்தை ஒரு சாட்டாக வைத்துதமிழ் பேசும் மக்களைப் பிளக்க—பிரிவுபடுத்த விடக்கூடாதென்பதற்காகவே நான் இங்கே இதைக்கூறுகிறேனே தவிர வேறொன்றுக்குமல்ல.

நான் ஆரம்பத்திலே சொன்னேன்; யாழ்ப்பாணப் பிரதிநிதி இந்த இயக்கத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து இன்றைக்கு எங்களோடு எவ்வளவோ தூரம் மனம் மாறி வந்திருக்கிறார். இன்னும் கொஞ்சம் தான் மாற வேண்டியிருக்கிறது; தேர்தல் முடிந்துவிட்டால் அது வும் மாறிவிடும். தேர்தல் நேரத்திலே எங்களைத் தாக்குவதற்காக அதைப் பயன்

(8ம் பக்கம் பார்க்க)

...ட்ட

?

...ால்லாவது கூறாமல், அர
...ங்கத்துக்கும்எங்களுக்கும்
...ள வழக்கை மாத்திரம்
...த்துச் சொன்னேன்,
...தைவிட்டு வேறு எதுவும்
...சால்ல வேண்டிய தேவை
...லை என்று கருதினேன்.

...மிழ்க் காங்கிரஸ் அங்கத்
...ர்களுக்கு மாறாகவோ,
...குடாப் பிரதிநிதி அவர்க
...க்கு மாறாகவோ, அல்லது
...ர்காற்றுறைப் பிரதிநிதி
...மாறாகவோ ஏதாவது
... சொல்லவிருந்தால்—
...த நாம் உரிய இடத்
...ல, வடக்கு, கிழக்கு
...ாணங்களிலே கூறலாம்
...று தான் சொன்னேன்;

...னால், நான் பேசி அமர்ந்
...ம் அமராததுமாக ஊர்
...வற்றுறைப் பிரதிநிதி, கற்
...ாப் பிரதிநிதி, உடுப்பிட்
... பிரதிநிதி மூன்று பேரும்
...ள் கட்சிகளின் சார்பில்,
...ழ்ப் பிரதிநிதிகள் என்ற

## ஏன் எதிர்க்கிறோம்?

தமிழ் மக்கள் தென்னிலங்கையிலே காணி வாங்கலாம், வீடு கட்டலாம் என்றால், சிங்கள மக்கள் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் ஏன் காணி வாங்கக் கூடாது? ஏன் வீடு கட்டி வாழக் கூடாது?

இதற்குத் தமிழரசார் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

இப்படிக் கேட்கிறார்கள் சிலர்.

அவர்களுக்குச் சொல்கின்றோம் நாம்.

சிங்கள மக்களுடைய உரிமையிலும் சுதந்திரத்திலும் தமிழரசார் என்றுமே தலையிட்டதில்லை: இனித் தலையிடப் போவதுமில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் காணி வாங்கியிருக்கிறார்கள்; வீடு கட்டி வாழ்கிறார்கள்; வியாபாரமும் செய்கிறார்கள்.

தமிழரசார் இதை எதிர்க்கவில்லை!

அப்படியானால்—

தமிழரசார் எதை எதிர்க்கின்றார்கள்?

அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தையே தமிழரசார் எதிர்க்கின்றனர்; ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் நிலமின்றித் தவிக்க, பதினாயிரக் கணக்கான சிங்களவர்களைப் பலாத்காரமாகத் தமிழ்ப் பிரதேசங்களிற் குடியேற்றுகின்றதே, அதைத்தான் தமிழரசார் எதிர்க்கின்றனர்; சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் தமிழ்ப் பிரதேசங்களிலே தமிழ்ப் பெரும்பான்மையைக் குறைக்க அரசாங்கம் திரை மறைவில் திட்டம் தீட்டுகின்றதே, அதைத் தான் தமிழரசார் எதிர்க்கின்றனர்;

இது தவறா?

—'கோவை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7ம் பக்கத் தொடர்ச்சி)

# பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம்

படுத்த விரும்புகிருர் போலும்.

### முழுப் பூசனியைச் சோற்றில் மறைத்தார்

இங்கே பேசுகின்ற பொழுது 'நான் ஒரு இந்து பல்கலைக்கழகமென்று சொல்லவேயில்லை' என்று சொல்லி முழுப் பூசனிக்காயைச் சோற்றில்மறைத்தார். சென்ற மூன்று வருடங்களாக நாட்டின் பல பகுதிகளிலும்இந்தஇந்து பல்கலைக் கழகம் என்ற தோறணையிலே, இந்து கலாச்சாரப் பல்கலைக் கழகம் என்ற தோறணையிலே அதுதான் வேண்டுமென்று அவர் பேசிய பேச்சுக்கள் அத்தனையையும் வெட்டி வைத்திருக்கிறேன்.

அது மாத்திரமல்ல, கிறிஸ்தவன் செல்வநாயகத்தின் தலைமையிலே இயங்குகின்ற காரணத்தால் தான் தமிழரசுக்கட்சி இன்று இந்து பல்கலைக் கழகத்தை எதிர்க்கிறதென்று ஓரிடத்தில் பேசினுர். இணுவிலிலே, எனது நண்பர் உடுவில் பிரதிநிதியின் தொகுதியிலே பேசுகின்ற பொழுது போதகர் செல்வநாயகம்-றேவறண்ட் செல்வநாயகம்என்று யாழ்ப்பாணப் பிரதிநிதி சென்ற வாரம் சொன்னுர்.

ஏனென்றுல் அங்கே அவர் கூற விரும்புவது. தாமே இந்துக்களுக்காக, இந்து சமயத்துக்காக இந்து பல்கலைக் கழகமொன்றை அமைக்க விரும்புவதாகத் தான். இங்கேபாராளுமன்றத்திலே பேசுகின்றது அங்கே எட்டாது என்று நினைக்கின்றுர்.

ஒருவேளை அவர் அரசியல் வாழ்வு ஆரம்பித்த காலத்திலே அவர் இங்கே பேசுவது அங்கேவிளங்காமலிருந்திருக்கலாம். இன்றைக்கு அப்படியல்ல, அவர் இங்கே ஒன்றைக் கூறிவிட்டு அங்கே ஒன்றைக் கூறித் தப்பிக்கொள்ள முடியாது.

ஆகையினுலே, இந்து பல்கலைக் கழகமென்பதைவிட்டு தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பூரணத்துவம் பெற்ற பல்கலைக் கழகம் என்று, இன்று கூறுகின்ற அதே தமிழ் காங்கிரஸ், வெட்ட வெளிச்சமாகச் சொல்லட்டும்; நாங்களும் அவர்களும் இன்னும் கற்குடாப் பிரதிநிதி போன்றவர்களும், ஏன் எனது நண்பர் மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி, யாழ்ப்பாணப் பிரதிநிதியைத் தொடர்ந்து பேசுகின்ற பொழுது, திருகோணமலையிலும் வேண்டாம்; யாழ்ப்பாணத்திலும் வேண்டாம்; மட்டக்களப்பில் வையுங்கள் என்று சொன்னுர்.

### உரிமை கிடைக்காமற் போன காரணம்

இப்படியாக நாங்கள் மோதத்தொடங்கினுல், இது எப்படிப் போய் முடியுமென்பது எமக்கு நன்ருகத் தெரியும். ஆகையினுல்தான்இந்த மோதலுக்கு இடம் கொடுக்கக் கூடாதென்று கூறுகிறேம். இதனுல்தான் கடந்த காலங்களிலே எமக்குக் கிடைக்க வேண்டிய எத்தனையோ சலுகைகள், எத்தனையோ உரிமைகள் கிடைக்காமல் போய்விட்டன.

உதாரணமாக, வடபகுதியிலே ஒரு துறைமுகம் வேண்டுமென்று அரசாங்க சபையின் காலத்திலே தொடக்கம் எமது மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அந்த நேரத்திலேஆட்சிபீடத்திலேயிருந்தவர்கள் என்ன செய்தார்கள்? அப்பொழுதிருந்த ஊர்காவற்றுறைப் பிரதிநிதியவர்களையும் காங்கேசன் துறைப் பிரதிநிதியவர்களையும் மோத விட்டு விட்டு ஒருவர் காங்கேசன்துறைக்கு என்று சொல்லுவார்— மற்றவர் ஊர்காவற்றுறைக்கென்று சொல்லுவார். காலஞ்சென்ற பிரதமர் அதாவது எங்களுடைய தற்போதைய பிரதமர் அவர்களின் தந்தையார், அவர்களுக்கு என்ன சொன்னுரென்ருல், "நீங்கள் உங்களுடைய சண்டையைத் தீர்த்துக் கொண்டு வாருங்கள்; நான் ஒரு துறைமுகத்தை நிறுவுகிறேனென்று சொன்னுர்.

இன்றைக்கு பிரதமர் அவர்களும் எங்களுக்கு அதைத் தான்சொல்லுகிருர்; 18பேர் கையெழுத்திட்டு, முஸ்லிம் பிரதிநிதிகள், தமிழ்ப்பிரதிநிதிகள்-இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள்— வடக்கு, கிழக்கு மாகாணப் பிரதிநிதிகள் 18பேர் கையெழுத்திட்டுத் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவவேண்டுமென்று கேட்டபொழுது, மூன்றுபேர் தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தமூன்றுபேர் இந்துபல்கலைக்கழகம் வேண்டுமென்று கேட்டார்கள்.

பதினெட்டையும் மூன்றையும் எண்ணுகின்ற பொழுது, ஆறிலொரு பகுதியினர் கூட அதைக்கேட்காத நேரத்திலும் பிரதமர் அவர்கள் எங்களுடைய தலைவர் காங்கேசன்துறைப் பிரதிநிதியவர்களுக்கு சரியாகச் சொன்னுர்கள். உங்களுடைய கோரிக்கையை நான் கல்வி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன்; அவர் அதைப் பரிசிலனை செய்வார்; ஆனுல் இந்த நேரத்திலே, மூன்று அங்கத்தவர்கள் இந்துபல்கலைக்கழகம் வேண்டுமென்றும் கோரியிருக்கிருர்கள்; உங்களுக்கு அதையும் நான் கூற விரும்புகிறேன்" என்று.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது என்று சொல்வார்கள். இதை யாழ்ப்பாணப் பிரதிநிதி இன்னும் மறந்து இருக்கிருரே என்றுதான் எனக்கு வேதனையாக இருக்கின்றது. எங்களோடு சேர்ந்து அவர்கள் மூன்று பேரும் கேட்டிருந்தால் - பதினெட்டோடு அந்த மூன்று தமிழ்க்காங்கிரஸ் பாராளுமன்ற அங்கத்தவர்களையும் சேர்த்து இருபத்தொன்ருக அரசாங்கக்கட்சியில் இருந்த அத்தனைபேரும் கேட்டிருந்தால்- 1966 ஆம் ஆண்டிலேயே எங்களுடைய கோரிக்கையை நாங்கள் பெற்றிருக்க முடியும். தடுத்தவர்கள் யார்? நாங்கள் தடுத்தோமா? நாங்கள் தடுத்தோம் என்று கூறுவதில் அறிவு இருக்கின்றதா என்று நான் அவர்களைக் கேட்க வேண்டியவனுக இருக்கின்றேன்.

இந்தப் பல்கலைக் கழகப் பிரச்சினையை வைத்து நீதாம், கமிஷன், சிறில்வைற் கமிஷன், குணவர்த்தனு கமிஷன் போன்ற பல்வேறு கமிஷன். அறிக்கைகளை எல்லாம் இங்கே படித்தார், யாழ்ப்பாணம் பிரதிநிதி.

### மக்களே தீர்க்கவேண்டும்

ஆனுல் இந்தக் கமிஷன்களால் அங்கம் வகித்த பல்வேறு பேரும் ஒன்றை மாத்திரம் தெளிவாகச் சொல்லி இருக்கிருர்கள். அதாவது தமிழ் பேசும் மக்களுடைய கல்வி அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று அவர்கள் எல்லோரும் சொல்லி இருக்கிருர்கள். அதை எங்கே நிறுவ வேண்டும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்; தீர்க்கவேண்டும்.

நமக்கு இடையில் பிளவு ஏற்படாத வகையில் இதை நாம் தீர்க்க வேண்டும். மட்டக்களப்பு என்று ஒருவர் சொல்ல, திருகோணமலை என்று மற்ருெருவர்சொல்ல, யாழ்ப்பாணம் என்று வேறெருவர் சொல்ல அது அந்தரத்தில் தொங்கும் ஒரு பல்கலைக் கழகமாகப் போய் விடாமல் நாம் எல்லோரும் சேர்ந்து ஒத்து, ஒரு இடத்தில் அல்லது பல கழகங்களைத் தொகுத்த ஒரு பல்கலைக் கழகமாக ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவுங்கள் என்று அரசாங்கத்தைக் கேட்பதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை என்றுதான் நான் யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்.

### மகிழ்ச்சி

பூரணத்துவம் பெற்ற ஒரு பல்கலைக் கழகமே தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை அவர் இன்றைக்கு ஒப்புக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக் குரியது. இந்த இடத்தைப் பற்றி நாம் சண்டை பிடிக்காமல் ஒரு முடிவுக்கு வரலாம்.

யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்களுக்கு திரு. இராமநாதன் அவர்களுடைய சொத்து, திரு. இராமநாதன் அவர்களுடைய சந்ததி யாருக்குப்போகாமல் காக்க வேண்டுமென்று கவனம் இருந்தால் அவர் நன்ருகக் காக்கட்டும். நான் அறிகிறேன், சர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் விட்டுச்சென்ற தருமச் சொத்து தமக்குத் திருப்பி வரவேண்டுமென்று அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த அவருடைய வாரிசு வழக்குத் தொடுத்து இருக்கிருர் என்று.

வேண்டுமானுல் இந்த வழக்கில் யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்கள் போய்ப் பேசட்டும்; சதிவழக்குப் பேசியதுபோல அதையும் அவர் பேசிப்பார்க்கட்டும். ஆனுல் எங்களைப் பிளவுபடுத்த வேண்டாம் என்று நான் அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

யாழ்ப்பாணத் தொகுதிப் பிரதிநிதி குறிப்பிட்ட இன்னும் ஒரே ஒரு விடயத்திற்கு நான் பதில் அளிக்க விரும்புகிறேன், தமிழ் மொழிச் சட்ட விதிகள் ஒரு ஏமாற்று என்று அவர் சொன்னுர். அதேவாயால் அவர் சொன்னுர், பிரதமர்டட்லி சேனநாயக்க அவர்கள் ஒரு கண்ணியவான் என்று. இந்த இரண்டு கூற்றுக்களுக்கும் உள்ள முரண்பாடு அவருக்குப் புரியாது.

கண்ணியம் மிகுந்த பிரதமர் அவர்கள் ஒரு ஏமாற்றுச் சட்டத்தைக் கொண்டு வந்தார் என்று யாழ்ப்பாணப் பிரதிநிதி கூறுகின்றுரா என்று நான் இங்கு கேட்க வேண்டியவனுக இருக்கிறேன். உண்மையில் பிரதமர் அவர்கள் இன்றுள்ள சட்டங்களுக்கு அமைய, உத்தியோக மொழிச் சட்டம், நியாயமான தமிழ் உபயோகச் சட்டம் ஆகிய இவை இரண்டிற்கும் அமைய தமிழின் உரிமையைச் சட்டபூர்வமாக எவ்வளவு கொடுக்கமுடியுமோ அவ்வளவைக் கொடுப்பதற்குத்தான் அந்தச் சட்ட விதிகளைக் கொண்டுவந்திருக்கிருர்.

### உலகம் சுற்றினுர்

அந்தச் சட்ட விதிகள் கொண்டுவரப் பட்ட நேரத்திலே உலகப் பிரச்சினையைத் தீர்க்கப் போய் இருந்தவர், எங்களுடைய உலகத் தலைவர் யாழ்ப்பாணப் பிரதிநிதி அவர்கள், இங்கே எங்கள் பிரச்சினையைத் தீர்க்க மறந்து உலகப் பிரச்சினையை தீர்க்கப்போய் இருந்தவர், திரும்பிவந்ததும் அந்தச் சட்ட விதிகளைப் பற்றி ஒன்றும்பேசாமல் அதற்கு ஆதரவாக வாக்களித்து விட்டு இன்றைக்குக் கூறுகிருர் அந்தச் சட்ட விதிகள் ஏமாற்று என்று.

உடுவில்பிரதிநிதிகுறிப்பிட்டதைப் போல எத்தனையோ எதிர்ப்புக்கு மத்தியிலே உத்தியோக மொழிச் சட்டம் செத்து விட்டது என்றுபுத்த பிக்குமாரும் மற்றவர்களும் ஆர்ப்பாட்டம் நடத்திய சூழ்நிலையிலே நிறைவேற்றப் பட்டவை அந்தச் சட்டவிதிகள்.

1966 ஆம் ஆண்டு அவ்வளவு எதிர்ப்புக்கும் மத்தியிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்ட விதிகளை இன்னும் சரிவர அமுல் நடத்தவில்லை என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு, முறைப்பாடே தவிர வேறென்றுமில்லை. அதை அமுல் நடத்தினுல் இன்றிருப்பதிலும் பார்க்க தமிழ் மொழியின் நிலை, தமிழ் மக்களின் நிலை எவ்வளவோ உயர்ந்திருக்கும் என்பதைச் சட்டம் படித்த யாழ்ப்பாணப் பிரதிநிதி நிச்சயம் தெரிந்து கொண்டுதான் இருப்பார்.

### உதாரணம்

நான் ஒரு சிறு உதாரணத்தைத்தான் இதற்குச் சொல்வேன். ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பி இரண்டு பேர்; அவர்களுடைய அன்னையின் ஆபரணங்களைத் திருடன் ஒருவன் அபகரித்துச் சென்றுவிட்டான் 1956 ஆம் ஆண்டிலே இந்த நாட்டுத் தமிழ் மக்களுடைய உரிமை, தமிழ் அன்னையுடைய உரிமை ஆட்சிபீடத்தால் அபகரிக்கப் பட்டது போல.

அந்தநேரத்திலே இரண்டு புத்திரர்களில் ஒருவன் அன்னையின் ஆபரணங்களை அபகரிக்க வந்தவனேடு போராடினுன்; அடிபட்டான்; இரத்தம் சிந்தினுன் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்தான். அவனிடமிருந்து தன் அன்னையின் உடைமைகளை மீட்க எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்தான். கடைசியாகப்பத்து வருடங்கள் போராடி 1966 ஆம் ஆண்டிலே ஒருபகுதி உரிமைகளை— உடைமைகளை அவன் பெற்றுன்.

அப்போது அண்ணன் என்ன செய்தார்? வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றுர் உன்னைச் சும்மா விடுவேனு பார் என்று இடையிடையே வெற்றி வேட்டுக் கிளப்பிக் கொண்டு நின்றுர்!

கடைசியாக தம்பி ஒரு பகுதி நகைகளை மாத்திரம் மீட்டுக் கொண்டு வந்தவுடன் அண்ணன் சொல்கிருர்; "அட பாவி, அட துரோகி, முழு நகைகளையும் மீட்காமல் வந்துவிட்டாயே, உன்னை அன்னை மன்னிப்பாளா?"

அதுபோலத்தான் இருக்கின்றது யாழ்ப்பாணப்பிரதிநிதி அவர்களுடைய பேச்சும்!

1956 ஆம் ஆண்டிலே தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது தொடக்கம் நாம் எத்தனையோ இயக்கங்களை நடத்திய நேரத்திலெல்லாம், எமதுமொழி உரிமையைப்பெற போராட்டங்களையும் வெவ்வேறு இயக்கங்களையும் நடத்திய நேரத்திலெல்லாம் படுத்துறங்கி விட்டு பத்து வருடங்களுக்குப் பின், இந்த அரசாங்கத்திலே ஓர் அங்கமாக நாம் சேர்ந்து, எம்மோடு ஒப்புக் கொண்ட பிரகாரம், தமிழ் மொழியின் உரிமைகளை ஓரளவுக்கறவது பெறச் சட்ட விதிகளை நிறைவேற்றி வழி செய்த பின்னர் உறக்கம் தெளிந்துவந்தயாழ்ப்பாணப் பிரதிநிதி கண்ணீர் வடிக்கிருர். "இது ஏமாற்று. இதில் ஒன்றும் இல்லை. எமது அன்னையினுடைய உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டான் தம்பி" என்று கண்ணீர் வடிக்கிருர்.

### அரசியல் இயக்கங்கள் ஏன் எடுக்கவில்லை?

1956 ஆம் ஆண்டு தொடக்கம் அவரும் இங்கே இருந்தார்தான்; 1960 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண மக்கள் அவரைத் துரத்தியடித்தது உண்மைதான், 1970 ஆம் ஆண்டிலே துரத்தியடிக்க இருப்பதுபோல.

ஆனுல் நிச்சயமாக அவர் அரசியல் இயக்கங்களை நடாத்த முடியாதவராக இருக்கவில்லை; ஏன் அவர் நடத்தவில்லை? சட்ட நடவ

(9ம் பக்கம் பார்க்க)

---

## வகுப்பு வாதமா?

சிங்களப் பெருமக்களே! சிந்தித்துப் பாருங்கள்;

தமிழைப் படிப்பதாற்றுன், உங்களுக்கு உத்தியோகம் தர முடியும் எனக் கட்டாயப் படுத்துகிறேமா?

தமிழ் தெரியாவிட்டால், இருக்கின்ற உத்தியோகத்திலிருந்து விரட்டி விடுவோம் என நெருக்குகின்றேமா?

தமிழனுக்கு மட்டும் தான் இந்தநாட்டில் இடமுண்டு எனத் தலைக் கனம் பிடித்து உளறுகிறேமா?

அதிகம் ஏன்?

உங்களுடைய உரிமைகளில் ஒன்றையாவது இதுவரை பறித்திருக்கிறேமா?

பறிக்கப் போகின்றேம் எனப் பயமுறுத்துகிறேமா?

நாங்கள் கேட்பதும் விரும்புவதும் இவ்வளவு தான்:-

சிங்களத்தை எம்மேல் திணிக்க வேண்டாம் என்கிறேம்.

சிங்களம் தெரியாததற்காக எந்தத் தமிழனும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தண்டிக்கப்படக் கூடாதென்கிறேம்;

அரசாங்க அலுவல்கள் தமிழிலும் ஆற்றப்பட வேண்டும் என்கிறேம்.

இது வகுப்பு வாதமா?

நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள்.

இது வகுப்பு வாதமா?

—'கோவை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.ஜீ.யிடம் யாழ். முஸ்லிம்கள் கேட்கும் கேள்விகள்!

நான் இக்கடிதத்தை வரைவதன் காரணம் 'தனிப் பெருந்தலைவரான' (தனக்குத்தானே) ஜி.ஜி. பொவின் தேர்தல் தந்திரத்தை அம்பலப்படுத்துவான் வேண்டியே.

சென்ற 12-8-1969தில் (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாணத்தில் முஸ்லீம் தெருவில்உள்ள மன்ப-உல்-உலூம் பாடசாலையில் எவரது அழைப்புமின்றி திடீரென ஜீப்பொன்றில் விஜயம் செய்து ஒரு கூட்டத்தைப் போட்டார் இந்த ஜீ.ஜீ. பாடசாலை தலைமை ஆசிரியரும், ஏனைய ஆசிரியர்கள் சிலரும், பெற்றோர்சிலரும் சமுகமளித்திருந்தனர். இதில் மேற்படி பாடசாலையின் வசதியீனங்களையும், இடநெருக்கடியையும் போக்க பொன்னம்பலத்தாரிடம் வேண்டுகோள் விடப்பட்டது. இதுவே இந்தக் கூட்டத்தின் சாராம்சம்.

ஆனுல் இதன் பின்னுல் ஒரு பெரிய சூழ்ச்சியே மறைந்திருக்கிறது. இது பொன்னம்பலத்தாரின் தேர்தல் டிமிக்கி என்பது வெள்ளிடைமலை. இதை முஸ்லீம்களும் அறியாமலல்ல. அதற்கு அக்கூட்டத்தில் கூடிய பத்துவயதுக்குட்பட்ட வேடிக்கை பார்க்க வந்த சிறுவரும், ஐந்து அல்லது ஆறு பெற்றூரும், கூடிய "பெருங் கூட்டமே" சான்ருக விருந்தது.

கூட்டம் மிகமிகக் குறைவாக விருந்ததை அவதானித்த ஆசிரியர் ஒருவர்தெருவால் செல்பவர்களை யெல்லாம் சொற்பலாத்காரத்தால் அழைத்துக் கொண்டிருந்தார். அப்படி அழைக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். ஆசிரியரின் வற்புறுத்தலுக்கிணங்க மூன்ருே நாலோ பேர் அளவில் வந்து சேர்ந்தனர். எப்படியோ கூட்டத்தில் கலந்து கொண்டோரைக் கணக்கெடுத்தால் பதினைந்து பேருக்கு மேற்படாது.

யாழ்ப்பாண முஸ்லீம்களின் சார்பில் நான், பொன்னம்பலத்தாரிடம் கேட்பது இவைதான்:

## மக்கள் குரல்

ஜீ: ஜீயே, 1965- மார்ச் மாதத்திலிருந்து யாழ் முஸ்லீம் பகுதிக்கு வராதிருந்து இன்று வந்திருப்பதன் காரணம் என்ன? அல்லது அடுத்த தேர்தலுக்காக முன்போட்ட அதிர் வாணமா?

சென்ற தேர்தலில் முஸ்லீம்களின் வாக்குகளால் பிழைத்த நீர் கடந்த நாலு வருடங்களில் ஒரு நாளாவது முஸ்லீம்களைப்பற்றிச் சிந்தித்தீரா? அல்லது வரநினைத்தீரா? அவர்களின் தேவைகளை விசாரித்தீரா? ஏன் உமக்கு கடந்த தேர்தலில் ஆதரவளித்த பெரிய புள்ளிகள் சிலரையாவது வந்து சந்தித்தீரா?

யாழ்ப்பாண எம். பியாக விருந்து யாழ்ப்பாணத்திலேயே காணக்கிடைக்காத நீர் இன்றுமட்டும் ஏன் முஸ்லீம்களின் மேல் பரிவுகாட்டுகிறீர்? உமது ஏமாற்று வித்தைக்கு ஏமாற முஸ்லீம்களை ஏமாளிகள் என்று எண்ணிவிட்டீரா? மேற்படி பாடசாலையில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டோரின் தொகையிலிருந்தே உமக்கு விளங்கியிருக்குமே முஸ்லீம்களின் ஆதரவு உமக்கு எப்படியிருக்குமென்று? இனிமேலும் முஸ்லீம்களின் வாக்குகள்கிடைக்குமென்ற நப்பாசையா?

யாழ்: முஸ்லீம் மக்களின் மையவாடிப் பிரச்சினையில் நீர் நடந்து கொண்ட விதத்திலேயே நீர் முஸ்லீம்களின் விரோதி என்பது தெளிவாகி விட்டதே. அது மட்டுமா?

அரபு-இஸ்ரேல் பிரச்சினையிலும் நீர் இஸ்ரவேலின் வால்பிடி என்பதும் தெரியாத தொன்ருே? இப் பிரச்சினையில் நீர் உலக முஸ்லீம்களின் விரோதியாகி விட்டீரே! எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு நீர் வீடுவீடாக வாக்குப் பிச்சை கேட்க வருவீரே, கேளும் அதில் ஆட்சேபனையில்லை.

தேர்தல் முடிவைக்கேட்டு மூர்ச்சித்து விழுவீரோ அல்லது அரசியலிலிருந்து ஓய்வு பெறுகின்றீரோ தெரியவில்லை. யாழ்ப்பாண முஸ்லீம்கள் அடுத்த தேர்தலில் உமக்கு சரியான தொரு பாடம் படிப்பிக்காமல் விடவே மாட்டார்கள். அப்போது தெரியும் யார் ஏமாளியென்று!

எம். எல். எம். இக்பால்
யாழ்ப்பாணம்

## உள்ளம் பேசு...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

களின் ஒரு நோக்கமாக இருந்தது.

கொழும்பில் அதிகாரம் குவிந்திருக்கக் கூடாதென்றும் மாகாண, மாவட்ட மக்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ள திருமதி பண்டாரநாயகாவின் பேச்சு வெறும் தேர்தல் பேச்சாக இல்லாமல், அந்தரங்கசுத்தியுடையதாக இருந்தால் வரவேற்கிறேம்.

பிரதேச சபையாக இருந்தாலென்ன, மாவட்ட சபையாக இருந்தாலென்ன, மக்கள் சபையாக இருந்தாலென்ன— பெயரைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்; அது, மாகாண, மாவட்ட மக்களின் கைக்கு செல்ல வேண்டும். அதுவே நமது அபிலாஷையாகும். மீண்டும் அற்பத்தனமான குறுகிய வகுப்புவாதபாதையிற் செல்லாது— அதிகாரப் பரவல் திட்டத்தை அம்மையார் ஆட்சிக்கு வரும் பட்சத்தில்—செயற்படுத்திஞல் அவருக்கு இவ்விஷயத்தில் நமது பூரண ஆதரவுண்டு என்று கூறுகிறேம்.

"இன்று நாம்நன்கு பாடம் படித்து விட்டோம். இனிமேல எதுவிதத்தப்பும் எமது ஆட்சியில் நடக்காது" என்று பாவமன்னிப்பு கேட்கும் அம்மையாருக்கு நாம் கூறுவது இதுதான்:- "நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நடக்கவேண்டியவை நல்லவையாக இருக்கட்டும்"

———

## பாராளுமன்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கையாவது எடுத்திருக்கலாம்.

அவருக்கு ஒருவேளை இயக்கங்களை நடத்தி, மறியல் செய்து அடிபட முடியாமல் இருக்கலாம். அதனுல்தான் 1956 ஆம் ஆண்டிலே நாம் காலிமுகத்திலே அடிபடும் நேரத்தில் பொலிஸ் ஜீப்புக்குப் பக்கத்தில் வந்து நின்ருர் அவர். அது அவருடையகெட்டித்தனமாக இருக்கலாம்.

ஆனுல் எங்களைப்பொறுத்த வரையில் நாம் இந்தச் சட்ட விதிகள் பூரணத்துவம் பெற்றவை என்று சொல்லவில்லை.

இந்தச் சட்டவிதிகள் கொண்டுவரப்பட்ட அன்று, அதாவது. 1966 ஆம்ஆண்டு ஜனவரி மாதம் 8ம்தேதி எமது கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள், இந்தச் சட்ட விதிகளினுல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழிஉரிமை காக்கப்பட்டிருக்கின்றது; அதேபோல எஞ்சிய பகுதிகளிலும் பூரண உரிமை பெற நாம் உழைக்க வேண்டுமென்று கூறினுர்கள்.

நாம் அதற்காக உழைக்கத்தான் போகிறேம்; உழைத்துக் கொண்டும்தான் இருக்கிறேம்.

ஆனுல், கடந்த நான்கரை ஆண்டுகாலமாக அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர்—அங்கே தமிழுக்குச் சம அந்தஸ்து என்று கூறுபவர்கள்—இந்தத் தமிழ் உரிமையைப் பெறுவதற்கு இங்கே ஏதாவது செய்ததுண்டா என்பதைத்தான் அவர்களைப் பார்த்து நான கேட்க விரும்புகிறேன்.

———

## 240 தற்காலிக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துத் தொழிற்சாலை பொது முகாமையாளருடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அப்பேச்சு வார்த்தையின் போது வேலை அனுபவம், ஒழுங்கு தேர்ச்சி இவைகளுக்கு 75 புள்ளிகளும் கல்வித் தகைமைக்கு 25 புள்ளிகளும் கணிப்பதென்றும் கல்வித்தகைமையினுல் நிரந்தரமாக்கப்படுவோர் பாதிக்கப்படமாட்டார்களென்றும். சேமவைப்புப் பணம் கூட்டிக் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இப் பேச்சுவார்த்தையின்படி 1-9-69 முதல் 240 ஊழியர் நிரந்தரமாக்குவதற்கு பொது முகாமையாளருடன் பேச்சு வார்த்தை நடாத்தி ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்த காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. சா. ஜே. வே. செல்வாவுக்கும் பொதுச் செயலாளர் அ.அமிர்தலிங்கத்திற்கும் சிமெந்துத் தொழிலாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன், அவர்களுக்கு வரவேற்பளிக்கவும் ஆயத்தமாகின்றனர்.

மேலும் பாரபட்சமின்றி நியமனம் நடைபெற்றுள்ளதா என்பதைப் பரிசிலித்து நடவடிக்கை எடுக்கவும், உண்டிச்சாலை ஊழியரை நிரந்தரமாக்குவதற்கும் மீண்டும் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதற்கிடையில் அடுத்த வாசாதனையில் உரிமை கொண்டாடும் வழக்க முடைவ தமிழ் காங்கிரசினர், இப்பிரசினையின் வாலும் தெரியாமல் தலையும் தெரியாமலிருக்கும் [illegible] இதைக் [illegible] தாக பொய்ப்பிரசாரம் நடத்தி வருவதாகத் தெரிகிறது.

## உழைப்பால் உயர்ந்த உத்தமரின் மறைவு!

தமிழ் நாட்டில் மிகச் சிறந்த வார சஞ்சிகையான 'ஆனந்த விகடன்' ஆசிரியரும் ஜெமினி திரைப்பட நிறுவனத்தின் ஸ்தாபகருமான திரு. எஸ்.எஸ். வாசன் அவர்களின் மறைவு தமிழ் நாட்டுக்கு மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகு முழுவதுக்குமே ஓர் பேரிழப்பாகும்.

'ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றி தாழா துஞற்றுபவர்'-என்ற குறள் நெறிக்கொப்ப சாதாரண குடும்பத்தில் பிறந்து தன்னுடைய இடைவிடாத உழைப்பால் அங்குல அங்குலமாக முன்னேறி தமிழ் நாட்டின் கோடீஸ்வரர்களில் ஒருவராக உயர்ந்தவர் திரு. வாசன். நேர்மையான உழைப்பு மூலம் ஒருவன் வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதற்கு வாசன் அவர்களின் வாழ்க்கை ஓர் சிறந்த எடுத்துக் காட்டு.

1928ம் ஆண்டு திரு. வாசன் 'ஆனந்த விகடனை' ஆரம்பித்த பின்னர் தான் தமிழ்ப் பத்திரிகை உலகில் நகைச் சுவை கார்ட்டூன் போன்ற அம்சங்கள் தலைகாட்டத் தொடங்கின. முதலில் தமிழ்ப்பத்திரிகை உலகில் இவற்றைப் புகுத்திய பெருமை வாசனுக்கே உரியது.

'ஆனந்த விகடன்' போகாத தமிழர் வீடே கிடையாது என்னும்படி, தமிழ் மக்கள் யாவரையும் கவரும் வண்ணம் ஆனந்த விகடனை வெளியிட்டு வந்தார். 1928ம் ஆண்டு முதல் இறக்கும் வரை ஆனந்த விகடன் ஆசிரிய பீடத்தை அலங்கரித்த திரு. வாசன் அவர்கள், தமது ஏடு மூலம் தமிழுக்கு செய்த தொண்டுகள் அனந்தம். அரசியல், இலக்கியம், கலை, நகைச்சுவை, நாவல், சங்கீதம், புனைகதை போன்ற பல துறைகளிலும் ஆனந்த விகடன் புரிந்த பணிகள் அளவிடற்கரியன. பேராசிரியர் கல்கியை அறிமுகப்படுத்திய பெருமை கூட, ஆனந்த விகடனுக்கும் அதன் மூலம் திரு. வாசனுக்கே உரியன.

தமிழ்த் திரைப்படத்துறையிலும், தமது ஜெமினி நிறுவனத்தின் மூலம் தரம் வாய்ந்த தமிழ்ப் படங்களை அளித்து தமிழகத்தின் பெருமையை உயர்த்தியவர் திரு. வாசன். சந்திரலேகா, ஒளவையார் போன்ற அவரது திரைப்படங்கள் இன்றும் மறக்க முடியாதவை.

இறுதிவரை பழுத்த காந்தியவாதியாகவே இருந்து மறைந்த திரு. வாசனின் நினைவை, 'ஆனந்த விகடன்' தமிழ் மக்களுக்கு எப்பொழுதும் அளித்துக் கொண்டே இருக்கும் என்று நம்புகிறேம்.

—கோவை மகேசன்

## மட்டுநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்த யூ. என். பி. பா. உ. வுக்கு அளித்த பின்னா, 'தினபதி'யில் அண்மைக்காலமாக குறித்த பா. உ.வின் செய்திகள் அதிக முக்கியத்துவம் தரப்பட்டு பிரசுரிக்கப்பட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது.

தினபதி ஆசிரியர் எடுத்துள்ள இச்சபதம் பற்றி மட்டுநகரைச் சேர்ந்த பிரமுகர் ஒருவரிடம் கருத்துக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

"கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அத்தனை பேரும் வெற்றியடைவதை கண்டைக்காய் தினபதி ஆசிரியரால் தடுத்து நிறுத்திவிட முடியாது. குறிப்பாக மட்டக்களப்பு மக்களின் பேரன்புக்கும் அபிமானத்துக்கும் உரிய செந்தமிழ்ச் செல்வர் இராசதுரையை வீழ்த்திவிடலாமென்று நினைப்பது வெறும் பகற்கனவாகும். ஆனைப்பட்ட மயில்வாகனம் போன்ற பெரிய புள்ளிகளால்கூட தோற்கடிக்கப் படமுடியாத அளவுக்குமட்டு நகர் மக்களின் இதயங்களில் வாழ்பவர் திரு. இராசதுரை. இதே போலவே திரு. இராசமாணிக்கத்தையும் எவரும் தோற்கடிக்க முடியாது. தினபதி ஆசிரியர் வீணே தனது முகத்தில் தானே கரி பூசிக்கொள்ளப் போகிருர்."

—இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தமிழ் காங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அற்ப புத்தியைக் கண்டீர்களா? தன் பேச்சு, மூச்சு, எழுத்து, சொத்து சுகம் சுற்றில் தனது உயிர் அத்தனையையும் தமிழ், தமிழினம், தமிழ் நாடு இந்த மூன்றுக்குமாக அர்ப்பணித்த வன்னிய சிங்கம் பயனுள்ள சேவை செய்யவில்லையாம். இதயமே இல்லாத 'மனிதக்கல்' கூறுகின்றது. தமிழ்ப் பண்பாடே இழந்து—இறந்து போன அருந் தலைவருக்கு சிலை வடிப்பதை 'கல்' என இகழும் தமிழ் காங்கிரசினரின் இழிகுணத்தை புரிந்து கொள்ளுங்கள்! இவர்கள் தான் இனத்தின் ஒற்றுமைக்கும் மாய்மாலக் கண்ணீர் வடிப்பவர்கள் என்பதையும் தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள்—கோவை]

## நவரத்தினம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து வந்தவர்கள் என்றும், யன்னுர், வவுனியா, கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களிலிருந்து குறிப்பிடத் தகுந்த பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லையென்றும் அறியப்படுகிறது.

நவரத்தினம் கட்சிப் பதவிகள் யாவும் திரு. நவரத்தினத்துக்கு 'விடுதலை'களுக்கும், திரு. நவரத்தினத்துக்கு கார் வாங்கிக் கொடுத்தவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்துக்கு வராதவர்களையெல்லாம் வந்ததாக பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தார்கள். உதாரணமாக நாரந்தனை கி. ச. முன்னுள் தலைவர் திரு. அருமைநாதர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதாக பத்திரிகைகளுக்கு அறிவிக்கப் பட்டதாம்.

## கருகம்பனையில் சிரமதானம்

கருகம்பனைச் சீரணி இயக்கத்தினரால் கருகம்பனை வீதிகள் விசாலிப்பு இரு வாரங்களுக்கு முன் சிரமதான முறையில் ஆரம்பிக்கப்பட்டது. தெல்லிப்பழைக் கிராம சபைத் தலைவரும், சீரணியின் தலைவர் திரு. க, நவரத்தினமும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். சீரணியின் செயலாளர் திரு. கே. எஸ். மகாலிங்கம் நன்றி கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளையன் செய்யாத கொடுமைகளை தமிழ்பேசும் மக்களுக்கு இந்த அரசாங்கம் இழைக்கிறதே! இதுதான் உங்கள் நீதியா?

“ஆங்கிலமொழி ஆட்சிமொழியாக இருந்த காலத்திலேயே ஆங்கிலமொழி படிக்காமலிருந்த தமிழ் உத்தியோகத்தர்களான கிராம சேவகர்கள், தமிழ் ஆசிரியர்கள், சில்லறை ஊழியர்கள் போன்றவர்களுக்குக் கூட இன்று சிங்களத் தகுதி விதிக்கப்படுவது கொடூரமானது. இத்தகைய அநீதியைத் துடைப்பதாக நிதியமைச்சர் இச்சபையிலே எங்களுக்கு உறுதி கூறுவிடில் நிதியமைச்சரின் இப்பிரேரணையை எதிர்த்து வாக்களிப்போம்.”

—இவ்வாறு திறைசேரி உண்டியல் மூலம் இருபது கோடி ரூபா கடன் வாங்குவதற்கு அனுமதிகோரிப் பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் கொண்டு வந்த பிரேரணை மீது பேசிய கிளிநொச்சி பா. உ., பண்டிதர் கா. பொ. இ, குறிப்பிட்டார்.

திரு. இரத்தினத்துக்குப் பதிலளித்த நிதியமைச்சர் கிளிநொச்சிப் பிரதிநிதியின் கோரிக்கைக்கு உடனடியாக இச்சபையில் இதுபற்றி உறுதியளிக்க முடியாதென்றும், ஆனால் இக்கோரிக்கை பற்றித் தான் ஆராய்ந்து தன்னால் முடிந்தவற்றைச் செய்வதாகவும் கூறினார்.

திரு: இரத்தினம் பேசும் போது கூறியதாவது:-

இந்த அரசாங்கம் தேசிய அரசாங்கமாக இல்லை என்று நான் பேசுகையில் கூறினேன். ஆனால் புத்தளம் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் ஜனாப் எம். எச். எம். நயினா மரிக்கார் தங்கள் பக்கத்திலும் தமிழர்கள் இருப்பதால் இன்றைய அரசாங்கம் தேசிய அரசாங்கந்தான் என்று கூறினார்.

இந்த அரசாங்கம் ஒரு தேசிய அரசாங்கமாக இருந்தால் இந்த நாட்டுத் தமிழர்களையும் அணைத்துச் செல்ல வேண்டும். தமிழர்களும் இந்த நாட்டில் வாழும் மக்கள்தான். உரிமை உள்ள மக்கள்தான், சொந்த மொழி உள்ள மக்கள் தான் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை.

இந்தக் கருத்து அரசாங்கத்திற்கு இருக்குமானால் எங்களை அடக்கியாண்டு அடிமைப்படுத்திய பிரித்தானிய அரசாங்கமே கேட்காததை இவர்கள் கேட்க மாட்டார்கள். பிரித்தானிய அரசாங்கமே தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குச் செய்யாத ஒரு துரோகத்தை இந்த அரசாங்கம் செய்யலாமா என்றுதான் நான் கேட்கிறேன்.

எங்களை அடக்கியாண்டவர்கள் எங்களை அடிமையாக்கியவர்கள், ஆங்கிலத்தை அரசகரும மொழியாக்கியவர்களே அந்த அரசகரும மொழியைக் கட்டாய மொழியாக்காதபோது இன்று தமிழ் ஊழியர்களுக்குச் சிங்களம் வேண்டுமென்று கட்டாயப் படுத்துவது நீதியா என்றுதான் கேட்கிறேன்

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எல்லோரும் அடிமை ஆட்சியில் இருந்த காலத்திலேயே, ஆங்கில அறிவு வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்கள் எல்லோருக்கும் இன்று சிங்களம் வேண்டுமென்று சொல்லுகின்ற அரசாங்கமா தேசிய அரசாங்கம் என்று நான் கேட்கிறேன்.

முன்பிருந்த ஆங்கில ஆட்சி செய்யாத ஒன்றை இந்த ஆட்சி செய்யச் சொன்னால் அனைத்துத் தன்மானம் உள்ளவர்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்களா என்று நான் கேட்கிறேன். அப்படித் தன்மானம் இல்லாதவர்கள் தமிழர்களாக இருந்தாலென்ன வேறு எந்த இனமாக இருந்தாலென்ன அவர்களால்

இந்த நாட்டிற்கு எந்தக் காலத்திலும் பெருமை வராது. எனவே தான் புத்தளப் பிரதிநிதி அவர்களைக் கேட்கிறேன். ஆங்கில அடிமை ஆட்சிக் காலத்திலே கேட்கப்படாத ஒன்றை இன்று தேசிய அரசாங்கம் கேட்டுத் தமிழ் அரசாங்க ஊழியர்களை நெருக்கவில்லையா என்று.

இதை யாரும் மறுக்க முடியுமா? ‘செக்குச் சுத்தும மாடுகள்போல’ என்று நாங்கள் குறை சொல்லுகிறோம் என்று கூறும் வவுனியாப் பிரதிநிதி திரு. ரி. சிவசிதம்பரம் அவர்கள் இங்கு இச்சந்தர்ப்பத்தில் இல்லாவிட்டாலும் அவரை நான் கேட்கிறேன்—இதை நீங்கள் விடுவியுங்கள் என்று. அரசாங்கத்தோடு இருக்கும் நீங்கள் இதை விடுவித்தால் அது பற்றி நாங்களும் பெருமையடைவோம்.

எனவே, அரசாங்க உத்தியோகத்தர்களை இப்படியாக நெருக்குவது நியாயம் இல்லை. கௌரவ நிதி அமைச்சர் அவர்களையும் இங்கேயிருக்கும் ஏனைய கௌரவ அமைச்சர்களையும் இந்தப் பெரும் குறையைத் தீருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்கில மொழி ஆட்சிமொழியாக இருந்த காலத்திலே ஆங்கிலமொழி படிக்காமலிருந்த உத்தியோகத்தர்கள், உதாரணமாக கிராம சேவகர்கள், தமிழ் ஆசிரியர்கள், ஐந்தாம் வகுப்புக் கூட தமிழ் படித்திராத ஜீப் வண்டி ஓட்டுகிறவர்கள் முதலியவர்களைச் சிங்களத்தில் ஏழாம் வகுப்புச் சித்தியடைய வேண்டுமென்று சொல்வது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

ஆதலால், இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு இந்த நாடு வளங்கொழிக்கத் தக்கதாக இருப்பதற்கு முதற்படியாக இந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நீதி செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முதற்படியாக யாழ்ப்பாணப் பகுதியிலோ அல்லது மட்டக்களப்புப் பகுதியிலோ வேலை செய்பவர்களுக்காவது இந்த நியாயத்தை வழங்கலாம்.

உள்ளூராட்சிச் சேவையிலே, பிரதேசங்கள் “அ” “ஆ” “இ” என்று பிரிக்கப்பட்டு, “இ” பிரிவு தமிழ் உத்தியோகத்தர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த “இ” பிரிவில் உள்ளவர்கள் எல்லோரும் தமிழ்ப் பகுதியிலே தான் வேலை செய்பவர்கள். அங்கே வேலை செய்யும் உத்தியோகத்தர்களுக்குச் சிங்களம் வேண்டாம் என்று கூறலாம். அதனைப் போல ஏன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் செய்யக் கூடாது என்று நான் கேட்கிறேன்.

கிராமசேவகர்கள் போன்ற பல உத்தியோகத்தர்கள், அந்தக் காலத்திற்கூட ஆங்கிலம் இல்லாமல் தமிழ் மொழி மூலமாகவும், சிங்கள மொழி மூலமாகவும் நியமிக்கப்பட்டவர்கள், தமிழ் ஊழியர்களுக்கு நியாயம் வழங்கும்வரை, உரிமையிழந்த ஓர் இனத்தின் உரிமை வழங்கப்படும்வரை, இப்படியான நேரங்களில் எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பது மாத்திரமல்லாமல், இப்படியானவற்றுக்கு எதிராகவும் வாக்களிக்கத் துணிந்திருக்கிறோம். இதற்கு நிதியமைச்சர் அவர்கள் தகுந்த மறுமொழி தராவிட்டால் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## கா. பொ. இரத்தினத்தின் கண்டனமும் நிதியமைச்சரின் பதிலும்!

# “பஞ்சணையில் படுத்துறங்கியோர் பதவி வேட்டைக்கு வருகிறார்கள்

## போலித் தலைவர்களை துரத்தியடிக்க தமிழ் இளைஞர்களே தயாராவீர்!”

‘தியாகம் இன்றேல் அரசியலில தமிழினத்திற்கு விமோசனம் இல்லை. உலக நாடுகள் பல வற்றை வழி நடாத்திய அந்நாட்டுத் தலைவர்கள் தியாகங்கள் பல புரிந்தே தம் இனத்தை வழி நடத்தினார்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் இப் பாதையில் சென்றே உரிமைகள் பெற்றது. எதிர்காலத்திலும் தியாக வழி நடந்தே நம் இனத்தின் உரிமைகளை பெறுவோம்’

இவ்வாறு முழக்கமிட்டார் சாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம் மறவன்புலவு. கைதடி. நாவற்குழி ஆகிய பகுதிகளில் இளைஞர் அணிகளை நிறுவி இளைஞர் அணியொன்றை அமைக்கும் பணியில் அரசியல் விளக்கம் தந்த பா. உ. மேற் கண்டவாறு முழக்கமிட்டார். ஆர்வம் நிறைந்த இளைஞர்கள்சமூகம் கொடுத்திருந்த இவ் இளைஞர் அணிக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:—

‘ஜாலியான வாழ்க்கை நடாத்தி மக்களின்—தமிழினத்தின் உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்ட வேளைகளில் பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கி விட்டு இன்று பதவிவேட்டையாட வந்துள்ள அடுப்படி முன்னணி தலைவர்களை தமிழினம் தங்கள் வாக்குச் சாட்டைக் கொண்டு விரட்டியடிக்க வேண்டும்.

தமிழினத்திற்குகெடுதிகள் கள் வந்துற்ற பொழுதெல்லாம் தலை மறைவாயிருந்து விட்டு—ஐரோப்பிய பாணியில் வாழ்க்கை நடாத்தும் போலித்தனம் நிறைந்த பொன்னம்பலம் போன்றவர்கள் இன்றும் ஒற்றையாட்சித்திட்டத்தின் கீழ் தான் தமிழினத்திற்கு விமோசனம் தருவோம் என்று கூறுவது அரசியல் வங்குரோந்துத்தனம் என்பதனை தமிழினம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தனது தளர்ந்து போன உடல் நிலையிலும் இனத்திற்கு விடுதலை, உரிமை பெற்றுத் தரு[illegible] முன்னிற்கும் தந்தை செல்வாவின் அரசியல் நிலைக்கு—அரசியல் தீர்க்க தரிசனத்திற்கு முன்னால் இப்போலித்தலைவர்களின் வேஷம் எடுபடவில்லை என்றதும் மக்களை வஞ்சிக்க நினைக்கிறார்கள். மக்கள், குறிப்பாக இளைஞர்கள் இப்போலித்தலைவர்களின் பிடியினின்றும் இனத்தைக் காக்க முன் வரல் வேண்டும்

எம்மினத்தின் உரிமைகள் கிடைக்க விருந்த வேளைகளில் எல்லாம் இனத்தைப் பிரித்தாழ வழி காணும் வகையில் சிங்கள முதலாளி வர்க்கத்தினர்க்கு இனத்தைக் காட்டிக் கொடுத்துப் பதவி பெற்றிட்டதனிப் பெரும்தலைவர் இன்றும் அதே யுக்தியை கையாள நினைப்பது அவருடைய அரசியல்வங்குரோத்துதனத்தையேகாட்டுகின்றது. இப்போலித்தலைவர்களின்வேஷத்தைகளைந்து இவர்கள் சுய ரூபத்தை எம்மினத்திற்கு உணர்த்த ஆர்வம் மிகுந்த இளைஞர்கள் ஒன்றுபட்டு தியாகம் புரிந்திடல் வேண்டும். என்றார்.

ஒவ்வொரு குறிச்சிக்குமாக பன்னிருவர் கொண்ட இளைஞர் அணி அமைக்கப்பட்டுள்ளது. இவ் விளைஞர் அணியில் பெருந்திரளான இளைஞர்கள் சேர்ந்து வருகிறார்கள்.

(சாவகச்சேரி நிருபர்)

## சாவகச்சேரி பா. உ. அழைப்பு!

## கர்ப்பக் கிருகம்......

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து மயங்கி நிற்பான் பிரகாஷ். ஒருநாள் மாலை கல்லூரி முடிந்து மாணவ மாணவிகள் வெளியேறிக் கொண்டிருந்தனர். புனிதமும் புறப்பட ஆயத்தமானாள். ஆனால்... அவளுடைய அழகு நயனங்கள் வாடிய மலர்கள் போல இமைகள் சோர்ந்து காணப்பட்டன.

“மிஸ் புனிதம்” என்று அழைத்துக் கொண்டே அருகில் சென்றான் பிரகாஷ்.

‘ஓ... நீங்களா?’ என்று திரும்பியவள் அப்படியே சோர்வுற்று அவன் மார்பில் சாய்ந்தாள்.

—வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய மனிதன்

**இவ்வாரச் சிறுகதை**

**பூட்டாப் பெருங் கதவை— நீ, பூட்டிவைத்துப் போனயோ...உண்மையென்ற பெருங்கதவையா அவள் பூட்டினாள்? சாரதாவையும் மாஸ்ரரையும் வாழ வைக்கவா உண்மையைப் பூட்டினாள்...இது தியாகமா? சமுதாயம் பழக்கியதன்மையா? பெண்மையின் இயல்பா? ...பெரிய மனிதர்களே! கூறுங்கள்——கூறுங்கள்.**

'என்ன நடந்திருக்கும்?'

யாழ்ப்பாணத்திலிருந்து அப்போது தான் வந்திருந்த உறவினராய ஆண்கள் சிலர் வாசிகசாலைக் குந்தில் உட்கார்ந்திருந்த மற்ற ஆண்களிடம் கேள்விகளைத் தொடுத்தனர்.

'என்னண்டு தெரியேல்லை? வெட்டிக் கிளிக்கிறது முடிஞ்சாப் பிறகு தான் ஏதேனும் தெரியும்.'

வெற்றிலைத் தட்டத்தை அரக்கி அவர்கள் முன் வைத்த முருகர் முனகினார்.

'சாத்தாப் பெருங் கதவை
—நீ
சாத்தி விட்டுப்
போனயோ.. ஓ...ஓ
பூட்டாப் பெருங் கதவை
—நீ
பூட்டி வைத்துப்
போனயோ...ஓ...'

உள்ளே ஒப்பாரி வைக்கும் பெண்களின் ஓலம் விஸ்வரூபம் எடுக்கிறது.

பொன்னுச்சிக்குத் தொண்டையே அடைத்து விட்டது.

'ஐயோ!...ஐயோ!' என்று அவள் தலையிலடித்துக் கதறிக் கொண்டிருந்தாள்.

புருசன் செத்துப் பதினைஞ்சு வருசங்கள் சென்று விட்டாலும் தன்னந் தனியனாக ஆசையோடு வளர்த்த குமர்ப் பிள்ளையைப் பறிகொடுக்கிறதென்றால் கவலை இருக்காதா பின்னே?

விடும் வெளியாச்சே—
எங்கட
வீட்டு முத்தம் பாழாச்சே
...ஓ...ஓ

பிலாக்கண ஓலம் கோயில் சங்காக ஊதலெடுத்துக் காதைப் பிளக்கிறது.

வீட்டின் ஓலைத் தட்டியாலும் சாக்கு மறைப்பினாலும் ஒதுக்கப்பட்ட ஒரு மூலையில் பிரேத பரிசோதனை நடக்கிறது.

அதன் எதிர்ப்பக்க மூலையில் பாடை கட்டும் வேலையும் துரிதமாக நடக்கிறது.

தம்பிப்பிள்ளை மாஸ்ரர் ஓடியாடி அலுவல் பார்க்கிறார்.

பொலிஸ்காரர்களுக்கு வேண்டிய சோடா, சிகரட், வெற்றிலை......அவர் பெரிய மனிதர்கள் பக்கமாகத்தான் நிற்கிறார்.

வீட்டின் முன்பக்கம் நிற்கும், வேப்பமர நிழலில் குந்தியிருக்கும், தூரத்து உறவினர்களும் தெரிந்த முகங்களும் தங்களுக்குள் குசுகுசுக்கின்றனர்.

'ஆர் சிலவு பார்க்கிறதாம்?'

'வேறை ... ஆர் ...மாஸ்ரர் தான்'

வாத்தியார் முன் வருகிறார். 'என்ரை பிள்ளையைப் போலே வளத்தனான். நான் தான் அதைச் செய்ய வேணும்'

கிரித்தியக் கோலத்துடன் புதுவேட்டி சகிதம் அவர் தயாராகிவிட்டார்.

வாத்தியாரின் மனைவியை எல்லோரும் உற்று நோக்குகிறார்கள். அதில் ஒருவித நன்றியும் ஆச்சரியமும் கலந்திருக்கிறது.

சூரியனின் ஒளிபட்டு வாடுகின்ற செடியாக அவள் தலை குனிகிறாள்.

வெட்கமா...?

—'வாய்க்கரிசியை ஆம்பிளையள் சுடலையிலை போடலாந்தானே'-முருகர் உரத்துச் சத்தமிடுகிறார்.

'பொன்னுச்சிக்கு வேறை ஆக்களில்லையே?'

'இருக்கினந்தான் இஞ்சை இப்ப இல்லை.'

'மாஸ்ரருக்கும் ...சரியான ...கவலை...அவற்றை முகத்தைப் பாத்தியே...எப்பிடியும் பெட்டைகளுக்குப் பாடம் ...படிப்பிக்கிறவரெல்லே...'

'பாடம் படிப்பிக்கிறதுமட்டுமே பெட்டையின்ரை படிப்புச் சிலவு கூட அவர் தான்.'

'டமார்'...... 'டமார்'...... 'டாஞ்சுக்கு...' 'டமார்...' 'டமார்' வாங்கப் போகும் பணத்திற்கு உபகாரமாகப் பறை ஒலி தேய்கிறது.

'நான் பெத்த மகளே...
என்னை விட்டுப்
போனயோ...ஓ...ஓ'

பொன்னுச்சியின் சன்னக் குரல் பறையொலியை அமுக்கி பிரளயமாக உருவெடுக்கிறது.

பிரேத பரிசோதனை முடிந்து விட்டது. தம்பிப்பிள்ளை மாஸ்ரர் கிட்ட நெருங்கி விசாரிக்கிறார். அவரது முகத்தில் சலனமே இல்லை.

குசு குசுப்பும்... நெட்டிமுறிப்புகளும் கூடுகிறது.

'வயித்திலை இரண்டு மாசமாம் அதாலை நித்திரைக் குளிசை திண்டிட்டாளாம்,

"எடி வேசை... இந்தப் பெட்டை இவளவு தூரத்துக்கு வந்திட்டுதே...'

'இந்தப் பெட்டை தான் நல்ல பெட்டையெண்டு பாத்தால் இதிலையும் புழுக் குத்திப் போட்டுது'

"ஆராயிருக்கும்...?'

'ஆரேனும் படிக்கிற பொடியள் தான்'

'எனக்குத் தெரியும்...தாய் கூட இ பிடி... எங்களுக்கு எதுக்கு வீண்கதையள்'

ஆச்சரியப் பேச்சுக்கள் வாய்க்கரிசிக் காசாகக் குலுங்கிச் சிதறுகிறது.

—'சே மாஸ்ரருக்கு என்ன மாதிரி இருக்கும் மகள் போலை வளர்த்தவருக்கு இதைக் கேட்டால்'—முருகேசுவுக்குப் பற்றிக் கொண்டு வருகிறது.

'குளிப் பாட்ட வேணும் சூரியனும் படுவானுக்கை போகுது'

பெண்கள் துரிதமாகிறார்கள். செய்யவேண்டியவையெல்லாம் விரைவாக நடக்கிறது.

'கொள்ளி வைக்கிறது ஆர்?' கேள்வி பெருமூடிச்சாக இறுகியது.

பாடை மெல்ல உயருகிறது. சுற்றி நின்று சிலர் தோள் கொடுக்கின்றார்கள்.

பிலாக்கண ஓலமும் மார்பிலறையும் தொனியும் காதைப் பிளந்து செவிப் பறையைத் தாக்குகிறது.

பாடை ஆடி அசைந்து முன்னேறுகிறது.

வேலியைப் பிரித்து ஆண்கள் கூட்டம் முன்னேற ஒப்பாரி வைக்கும் பெண்கள் கூட்டம் பின்தங்கி ஓலமிடுகிறது.

பாடையும் மனிதர்களும் ஒழுங்கையை கடந்து ரோட்டில ஏறிவிட்டனர்.

முச் சந்தி கழிகிறது.

பறை ஓசை வேண்டுமளவுக்கு ஒலித்து ஓய்கிறது.

கடதாசிச் சுருளினை நெருப்புப் புகையால் பிளக்கின்றதால் எற்படும் 'படார்' ஒலிகள்—அது வெடி—'படார்!' 'படார்!'

அரிசிப் பொரியும், சில்லறை நாணயங்களும் நாவிதன் கையால் பாடை மேல் விசியடிக்கப் படுகிறது. கலகலத்து ரோட்டில் சிதறும் நாணயங்களைப் பையனொருவன் பொறுக்கி நாவிதன் கையில் சேர்க்கிறான்.

ஊர் வலம் சுடலையை நோக்கி எறும்புக் கூட்டமாக நகர்கிறது.

புதுக் குடத்துடன் முன்னே நடக்கிறார் மாஸ்ரர்.

"என்ன சொன்னாலும் மாஸ்ரர் மாஸ்ரர் தான்' கணபதி முருகேசரிடம் முணுமுணுத்தார்.

'பிள்ளையக் கொள்ளிவைக்கக்கூட ஆள் முன்னுக்கு வந்திருக்குது... ம்... ஆர் தான் அந்தப் பிள்ளைக்கு பிள்ளை கொடுத்தானோ?'

முருகேசுவின் நெஞ்சு ஏக்கப் பெருமூச்சை வார்த்தையாகக்கக்குகிறது.

'நித்திரைக் குளிசை பெட்டைக்கு என்னண்டு கிடைக்கும்?'

ஆருக்குத் தெரியும்...?"

'படார்! படார்! படார்!'

வெடிகள் வயிற்றைப் பிளந்து செத்து மடிகின்றன.

## நந்தினி

புகைக் கும்பலை எதிர்த்து நீச்சலடிக்கும் மீனாக ஊர்வலம் முன்னேறுகிறது.

மாஸ்ரர் கம்பீரமாக நடக்கிறார். எப்படித்தான் மூளையைக் குழப்பினாலும் வாத்தியாரின் மனைவிக்குத் தெரிந்த உண்மை மற்ற எவருக்கும் தெரிந்திருக்காது.

விட்டில் அவள் நீண்ட நேரம் அழுது கொண்டிருக்கிறாள். பொன்னுச்சி கூட அழுது ஓய்ந்து விட்டாள் ஆனால் சாரதா—வாத்தியாரின் மனைவி .....?

'செத்த வீட்டுச் சிலவு பார்த்தாப் போலையும்...... கொள்ளி வைத்தாப் போலையும் உண்மைகள் மறைக்கப் பட்டுவிடுமா? மனச் சாட்சி தான் சும்மா விடுமா?

அவள் அழுது கொண்டிருக்கிறாள்.

புனிதத்திற்கு—செத்தவளுக்கு—பிள்ளை கொடுத்ததே வாத்தியார் தான். அவள் உயிரோடை இருந்தால் தன்னுடைய மானத்தைக் கெடுத்து விடுவாளென்று... கரு அளிக்கும் மாத்திரையெனக்கூறி தூக்கமாத்திரைகளைக் கொடுத்து அந்த அப்பாவிப் பெண்ணைச் சாகடித்ததும் சாரதாவின் கணவர் தம்பிப்பிள்ளை தான். தன் கணவர் தான் என்பதும் அவளுக்குத் தெரியும்!...!!

சாரதாவால் கணவரைக் காட்டிக் கொடுக்க முடியவில்லை.....கணவன் தூக்குமேடையில்—தானும் பிள்ளைகளும் நடுத்தெருவில்—

அவளால் செய்ய முடிந்தது மனம் வருந்திக் குமுறி அழமட்டுமே. அவள் அழுது கொண்டிருக்கிறாள்.

'மாஸ்ரற்றை மனசும் தங்கம். பெண்சாதியின்ரை மனசும் தங்கம். இரண்டு பேரும், அவள் புனிதத்துக்கு மேலை வைச்சிருக்கிற அன்பு எவ்வளவப்பா?... அவ... வாத்தியார் பெண்சாதி எவ்வளவு தூரத்துக்குக் கவலைப்பட்டு அழுதவ...'

முருகேசர் கணபதியிடம் முனகினார்.

'என்ன சொன்னாலும் பெரிய மனிசன் பெரிய மனிசன் தான்'

வாத்தியாரின் காதில் அவர்களது வார்த்தைகள் விழாமலில்லை; அவர் கம்பீரமாக நடக்கிறார்.

'சாரதா-அவள் உண்மைகளை வெளிக்குச் சொல்ல மாட்டாள்'

உறுதியாக அது அவருக்குத் தெரியும்.

கூட்டம் சுடலையில் வேலையை முடித்துக் கொண்டு மெதுவாகத் திரும்பிக் கொண்டிருக்கிறது—

பகிரென சுவாலை வீட்டு எரியும் தீ மாஸ்ரரின் நெஞ்சிலும் எரிகிறதா? சாரதா நெஞ்சில் மட்டும் தான் எரிகிறதா?—

—யாவும் கற்பனை—

# சேவை நலம் பாராட்டு விழா



ஆந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியராயும், துணை அதிபராயும், பின் அதிபராயும் கடமையாற்றி இளைப்பாறும் திரு. வி. சுப்பிரமணியம அவர்களின் சேவை நலம் பாராட்டு விழா அண்மையில் துணை அதிபர் திரு. க. சிவகுமரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்து கொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னை நாள் முகாமையாளர்களுள் ஒருவரும் உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. வி. தருமலிங்கம் அவர்கள் பேசும்போது, ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்பதாம்ஆண்டு ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் சரித்திரத்திலேயே முக்கியமான ஒரு ஆண்டு. அது ஸ்தாபகர் பிறந்த நூறாவது ஆண்டு. இன்றைய அதிபர் இளைப்பாறுவதும் இவ்வாண்டிலேதான். 1944-ம் ஆண்டு இக்கல்லூரிக்குப்புதிய சகாப்தம் ஒன்று ஆரம்பித்தது. அன்று மூன்று சுப்பிரமணியங்கள் இக்கல்லூரியை வளர்க்கத் தொடங்கினார்கள். கிராமப்புறப் பள்ளிக்கூடமாக இருந்து பள்ளிக்கூடத்தை அகில இலங்கைக் கல்லூரியாக மாற்றினார்கள். மூன்று சுப்பிரமணியங்களுள் ஒருவர் 1960-ம் ஆண்டு பதியூதின் மொகமத்தினால் உதைத்துத் தள்ளப்பட்டார். அடுத்த சுப்பிரமணியம் கால வெள்ளத்திலே இளைப்பாறினார். இந்த ஆண்டிலே மூன்றாவது சுப்பிரமணியமும் இளைப்பாறுகிறார். 1944-ம் ஆண்டு ஆரம்பித்த இந்த உன்னத சகாப்தம் இருபத்தைந்து ஆண்டுகள் முடிவுறுகின்ற இன்றுடன் முடியப் போகிறது போலும். நமது கல்லூரியின் வரலாற்றைச் சமீபத்தில் சந்திரனுக்குச் சென்ற நிகழ்ச்சியுடன் ஒப்பிடலாம். பூமியிலிருந்து எத்தனையோ விஞ்ஞானிகள் சேர்ந்து ஒரு ஆம்ஸ்ரோங்கை சந்திரனுக்கு அனுப்பினார்கள். சந்திரனுக்குப் போன ஆம்ஸ்ரோங்தான் ஒரேட்டர் சுப்பிரமணியம் என்றால் அவரை அனுப்பிய தலைமை விஞ்ஞானி இன்று இளைப்பாறும் அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் என்று கூறலாம். பாரத கண்டத்தை உருவாக்கியவர் பட்டேல்; பாரத கண்டத்தின் வளர்ச்சியுடன் கல்லூரியை ஒப்பிட்டு நோக்கின் நேருவாக ஒரேற்றர் சுப்பிரமணியம் இருந்தால் பட்டேலாக விளங்கியவர் இன்றைய அதிபர் வி. சுப்பிரமணியம் எனப் பாராட்டிப் பேசினார்.

திரு. வி. பொன்னம்பலம், திருமதி எஸ். வரதராசா உட்பட மற்றும் பலர் அதிபரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2வது மாதம் ஜனவெள்ளம் பெருக்கெடுத்து காட்சியளிக்கிறது!



சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருமலை)

நடிகர்திலகம் ★ சிவாஜிகணேஷன் (இரு வேடங்களில்) கவர்ச்சிக்கன்னி ★ ஜெயலலிதா சௌகார்ஜானகி என். எம். நம்பியார் வசந்தா நாகேஷ் மனோரமா மற்றும் பலர் நடித்த

சிவாஜிகணேஷன் அளிக்கும் அருண் பிரசாத் மூவிஸ்

# எங்க ஊர் ராஜா

கதை வசனம் பாலமுருகன் டைரக்ஷன் P. மாதவன் இசை மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்

எதிர்பாருங்கள்!!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா அசோகன் சோ நடித்த

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

## அடிமைப் பெண்

(ஈஸ்ட்மன் கலர்)

எதிர்பாருங்கள்!!

ஜெமினிகணேஷன் சரோஜாதேவி நாகேஷ் நடித்த

அமர்ஜோதி மூவிஸ்

## குல விளக்கு

கதை, வசனம், டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

## 2வது வாரமாக காட்சிதருகிறது



செல்லமகால் (கொட்டாஞ்சேனை) ஈரொஸ் (பாமன்கடை)

விரைவில் வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டு நகர்)

எம். ஜி. ஆர், ஜெயலலிதா, ஷீலாதேவி, நாகேஷ், எஸ். ஏ. அசோகன், எம். என். நம்பியார், பண்டரிபாய் நடிக்கும்

# ★ புதிய பூமி

5வது வாரம்

கெயிட்டி (கொழும்பு)

ஏ. வி. எம். ராஜன் புஷ்பலதா, — நடிக்கும் —

# பால் குடம்

2வது வாரமாக காட்சியளிக்கிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) விஜயா (மட்டுநகர்)

ஆகிய திரைகளில்



ரங்கராவ், அஞ்சலிதேவி, பேபி ரோஜாரமணி, பாலையா, எல். விஜயலட்சுமி, ஏ. கருணாநிதி, கீதாஞ்சலி, வாணிஸ்ரீ மற்றும் பலர் நடிக்கும்

(ஈஸ்ட்மென் கலர்)

# பக்த பிரகலாதா

● "தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான்" என்ற தத்துவத்தை தத்ரூபமாக விறுவிறுப்புடன் சித்தரிக்கும் நவீன பக்திப்படம்.

சினிமாஸ் திரைகளில் எமது அடுத்த வெளியீடு!

பத்மினி, நாகேஷ், ரவிச்சந்திரன் பாலையா, குமாரி சச்சு, கருணாநிதி ஆகியோர் நடிக்கும்



# எங்களுக்கும் காலம் வரும்

6 வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு)

எம். ஜி. ஆர்—ஜெயலலிதா நடிக்கும் —

# கணவன்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருட செப்டம்பர் மாதம் 3-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org